# காணாமல் போன நிலா

## - ராஜேஷ்குமார் -

# 1

கோவை.

குளிர்ந்து போயிருந்த சாயந்தர வேளை.

நிலா பெட்ரோல் பங்க்கில் தன் கைனடிக் ஹோண்டாவுக்கு மூன்று லிட்டர் பெட்ரோலை போட்டுக் கொண்டு - கேஷ் கௌண்டரில் பணத்தைக் கொடுக்கும்போது அங்கிருந்த இளைஞனிடம் கேட்டாள்.

"ஸ்பீட் க்யூர் சைக்யாட்ரிக் சென்டர்' எங்கே இருக்கு?"



அந்த இளைஞன் அழகாய் இருக்கிற நிலாவை பார்வையால் மென்றுகொண்டே - சொன்னான்.

"கஸ்தூரிபாய் நகர்ல அஞ்சாவது கட்..."

"தேங்க்ஸ்..."

திரும்பினாள்.

"ஒரு நிமிஷம்..."

நின்றாள்.

"பேலன்ஸ் வாங்கிக்காம போறீங்களே...?"

"ஓ... ஸாரி..." அவன் நீட்டிய சில்லறையை வாங்கிக்கொண்டு தன் கைனடிக் ஹோண்டாவுக்கு வந்தாள். ஸ்டார்ட் பட்டனைத் தட்டி - வண்டியில் பூங்கொடி மாதிரி பரவி - ஆக்ஸிலேட்டரை முறுக்கி விரட்டினாள். குளிர் காற்றில் கேசம் சிலும்பியது.

மஞ்சள் நிற சுடிதாரில் இருந்த - நிலாவுக்கு வயது இருபத்தைந்து இருக்கலாம். நீள்வெட்டு முகத்தில் பானுப்ரியா கண்கள்.

கைனடிக் ஹோண்டா - நீளமாய் ஓடி - கஸ்தூரிபாய் நகர் என்று தெரிந்த - மரங்கள் சூழ்ந்த அவென்யூக்குள் நுழைந்தது.

வரிசையாய் பங்களாக்கள். புதிதா'

கட்டப்பட்டவை. அல்சேஷன், பாமரேனியன் குரைத்தது. நிலா வண்டியின் வேகத்தைக் குறைத்து - மெதுவாய் ஓட்டியபடி ஐந்தாவது குறுக்குத் தெருவைத் தேடினாள்.

தட்டுப்பட்டது.

வேப்ப மரங்களும், மேஃப்ளவர் மரங்களும் அடர்ந்த தெருவுக்குள் ஸ்கூட்டரை நுழைத்து - தெருவின் கோடியில் இருந்த ஸ்பீட் க்யூர் சைக்கியாட்ரிக் சென்டர் என்று போர்டு தெரிந்த - கட்டிடத்துக்கு முன்பாய் ஸ்கூட்டரை அணைத்து ஸ்டாண்ட் இட்டாள். கட்டடத்தின் முகத்தில் இருந்த போர்டு - டாக்டர் ப்ரவீண் - சைக்யாட்ரிஸ்ட் என்ற பித்தளை எழுத்துக்களை ட்யூப் லைட் வெளிச்சத்தில் காட்டியது.

உள்ளே நுழைந்தாள்.

சற்று பெரிதான ஹால். ஹாலின் மூன்று பக்கச் சுவர் ஓரமாய் பாலிமர் நாற்காலிகள் ஆரஞ்சு வண்ணத்தில் தெரிய - பத்துக்கும் மேற்பட்ட பேஷண்டுகள் உட்கார்ந்திருந்தார்கள். ஹாலின் இடது பக்க மூலையில் - மேஜையும், டெலிஃபோனுமாய் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய தலைக்கு மேல் ப்ளாஸ்டிக் போர்டு ஒன்று பீ ஸீட்டட் - டாக்டர்



ஈஸ் இன் - என்றது.

நிலா அந்தப் பெண்ணை நெருங்கினாள்.

"டாக்டரைப் பார்க்கணும்..."

"முதலிலேயே அப்பாயிண்ட்மெண்ட் வாங்கியிருக்கிறீர்களா...?"

"இல்லை..."

"அப்படீன்னா டோக்கனை வாங்கிக்குங்க... உங்க முறை வந்ததும் டாக்டரைப் பார்க்கலாம்..."

"நான் ஒரு பேஷண்டா டாக்டரைப் பார்க்க வரலை."

"தென்...?"

"பர்சனல்..."

"ஸாரி... டாக்டர் பேஷண்ட்ஸ்ஸை பார்க்கிற நேரத்தில் பர்சனல் விஷயமா பேச விரும்பறதில்லை... அவரோட கன்ஸல்டிங் ஹவர்ஸ் எட்டு மணிக்கு முடியும். அதுக்கப்புறமா வந்து பாருங்க..."

"இது கொஞ்சம் அவசரமான விஷயம்... ஒரு பத்து நிமிஷம் பேச அலவ் பண்ணினா போதும்..."

அந்தப் பெண் நிலாவை அலட்சியமாய்ப் பார்த்தாள்.

"உங்க பேரு...?"

"நிலா..."

"டாக்டருக்கு நீங்க சொந்தமா...?"

"இல்லை."

"தென்...?"

"ஒரு ஃப்ரண்ட்..."

அந்தப் பெண் இண்ட்டர்காமின் ரிஸீவரைக் கையில் எடுத்துக் கொண்டு ஒரு பட்டனை அழுத்திவிட்டு பேசினாள்.

"டாக்டர்... நான் சுகன்யா..."

"..."

"சொன்னேன் டாக்டர்... அவங்க கேட்கலை... ஏதோ முக்கியமான விஷயமாம்..."

"..."

"சரி... டாக்டர்..." - தலையாட்டியவள் ரிஸீவரை வைத்துக்கொண்டே நிலாவை ஏறிட்டாள்.

"கொஞ்ச நேரம் வெயிட் பண்ணச் சொன்னார்..."



நிலா காலியாய் இருந்த ஒரு பாலிமர் நாற்காலிக்குப் போய் உடம்பைக் கொடுத்தாள்.கையில் வைத்திருந்த வானிடி பேக்கைப் பிரித்து - சுருட்டி வைத்திருந்த, வார இதழை எடுத்துப் பிரித்து - படிக்காமல் விட்ட பகுதி எது என்று தேடி - வாசிக்கத் தொடங்கியபோது - எதிரில் நிழலாடியது.

நிமிர்ந்தாள்.

அந்த இளைஞன் நின்றிருந்தான்.

மலர்ந்தாள்.

"அருண் நீங்களா...?"

அவன் புன்னகைத்தான். அந்தப் புன்னகையில் சந்தோஷ வெளிச்சமில்லை. "நானேதான்...!"

"என்ன இப்படி ஆயிட்டீங்க...? காலேஜ் டேஸ்ல பார்த்த அருண் மாதிரி இல்லையே...?"

"கல்யாணமாயிடுச்சு. கூடவே சந்தோஷமும் போச்சு...! ஆமா... நீங்க எங்கே இங்கே...?"

"டாக்டரைப் பார்க்க வந்தேன்..."

"என்ன பிராப்ளம்...?"

"நோ... நோ... எனக்கு ஒண்ணுமில்லே... ஒரு பர்சனல் விஷயமா டாக்டரைப் பார்க்க

வந்தேன்...! நீங்க என்ன விஷயமா...?"

"என்னோட ஒய்ஃபுக்கு கொஞ்சம்... மெண்ட்டல் பிராப்ளம்... என்ஸெண்ட்ரிக் டைப்... அதான் டாக்டர்கிட்டே கன்சல்ட் பண்ணிக்கிட்டு போலாம்ன்னு வந்தேன்."

"ஒய்ஃப் எங்கே...?"

"அவளைக் கூட்டிட்டு வரலை... மொதல்ல டாக்டர்கிட்டே கன்சல்ட் பண்ணிட்டு அப்புறமா அவர் சொல்ற நேரத்துக்கு கூட்டிட்டு வரலாம்னு நினைக்கிறேன்..."

"எக்ஸெண்ட்ரிக் டைப்பனா எப்படி...?"

"ராத்திரி நேரங்கள்ல சரியா தூங்கறதில்லை... சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் அவளுக்கு அசாத்தியமான கோபம் வரும். அப்படி கோபம் வர்ற நேரத்துல என்னைக் கிள்ளறதும் அடிக்கிறதும் உண்டு..."

"பேதடிக..."

நிலா வருத்தமாய் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - டாக்டரின் அறையிலிருந்து காலிங் பெல் சத்தம் கேட்டது. உடனே ரிசப்ஷனிஸ்ட் குரல் கொடுத்தாள்.

"மிஸ்டர் அருண்! நீங்க டாக்டரைப் பார்க்க போகலாம்."



அருண் நிலாவிடம் திரும்பினான்.

"நான் வரட்டுமா...?"

"உங்க மனைவி சீக்கிரமே குணமடைஞ்சுடுவாங்க. டோண்ட் ஒர்ரி."

"உங்க வாழ்த்துக்கு நன்றி..." - புன்னகையோடு சொல்லிவிட்டு டாக்டரின் அறைகுள் நுழைந்தான் அருண்.

நிலா மறுபடியும் வார இதழைப் பிரித்தாள். ஒரு சிறுகதையையும் நான்கைந்து துணுக்குகளையும் படித்து முடித்திருந்த போது - அருண் வெளியே வந்தான். நிலாவை நெருங்கினான்.

"நான் கிளம்பட்டுமா...?"

"டாக்டர் என்ன சொன்னார்?"

"நாளைக்கு சாயந்தரம் கூட்டிட்டு வரச் சொன்னார்."

"உங்களுக்கு கோயமுத்தூர்ல எங்கே வீடு...?"

"மகாகவி பாரதியார் நகர்ல... துங்கபத்ரா தெரு, நெம்பர் டுவெண்டி சிக்ஸ். ஒரு நாளைக்கு ஒரு நாளைக்கு வீட்டுக்கு வாங்களேன்..."

"வர்றேன்..."

"உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலைன்னு நினைக்கிறேன்."

"ஆகலை."

"ஏன்... லேட்...?"

"அப்பாவுக்கு எந்த மாப்பிளையையும் பிடிக்கலை..."

டாக்டர் அறையிலிருந்து காலிங் பெல் சத்தம் கேட்டது. ரிசப்ஷனிஸ்ட் குரல் கொடுத்தாள். "நிலா! நீங்க டாக்டரைப் பார்க்க உள்ளே போகலாம்..."

நிலா தலையசைப்பால் அருணிடம் விடைபெற்றுக்கொண்டு டாக்டரின் அறைக்குள் நுழைந்தாள்.

உள்ளே நுழைந்தவள் சுமார் பதினைந்து நிமிடம் கழித்து வெளியே வந்தாள். முகம் சிவந்து வியர்த்திருந்தது. ரிசப்ஷனிஸ்ட்டிடம் எதுவும் சொல்லிக்கொள்ளாமல் வேகவேகமாள் வெளியேறி – வாசலில் நிறுத்தியிருந்த கைனடிக் ஹோண்டாவில் ஏறி கிளம்பினாள்.

ஸ்கூட்டர் சத்தம் தேய்ந்ததும் – காத்திருந்த பேஷண்ட்டுகளில் ஒருவர் டாக்டரின் அறைக்குள் நுழைவதற்காக எழுந்தார்.

ரிசப்ஷனிஸ்ட் கையமர்த்தினாள்.



"டாக்டர் உள்ளேயிருந்து காலிங் பெல் கொடுக்காம உள்ளே யாரும் போகக் கூடாது...!"

பேஷண்ட் நாற்காலியில் திரும்பவும் போய் உட்கார – ரிசப்ஷனிஸ்ட் டாக்டரின் அறையிலிருந்து வரும் காலிங் பெல் சத்தத்துக்காக காத்திருக்க ஆரம்பித்தாள்.

ஒரு நிமிஷம்...

இரண்டு நிமிஷம்...

டாக்டரின் அறையிலிருந்து காலிங்பெல் சத்தம் கேட்கவில்லை.

ரிசப்ஷனிஸ்ட் யோசித்தாள். "பர்சனல் விஷயம் பேசப்போன அந்தப் பெண் ஏதாவது அதிர்ச்சியான விஷயத்தைச் சொல்லி டாக்டரின் மூடை ஸ்பாயில் செய்துவிட்டாளோ...?"

மேலும் ஒரு நிமிஷம் கரைந்தது.

பொறுமையில்லாமல் – இன்ட்டர்காமின் ரிஸீவரை எடுத்தாள். பட்டனைத் தட்ட – மறுமுனை '...' என்று கதறியது.

ரிஸீவர் எடுக்கப்படவில்லை.

'டாக்டரிடம் ஏன் இந்த மௌனம்...?'

பத்து தடவைக்கு மேல் இன்ட்டர்காம் ரிஸீவர் கதறியும் – மறுமுனை ரிஸீவர் எடுக்கப்படாமல்

போகவே – ரிசப்ஷனிஸ்ட் ரிஸீவரை வைத்துவிட்டு எழுந்தாள். நடந்து போய் டாக்டரின் அறைக்குள் கதவை டோர் க்ளோஸர் எதிர்க்க தள்ளிக்கொண்டு உள்ளே போனாள்.

'டாக்டரை நாற்காலியில் காணோம். டாய்லெட்டுக்கு போயிருப்பாரோ?'

உள்ளே நடந்தாள்.

மேஜையைக் கடக்கும்போது பட்டென்று நின்றாள்.

ரிவால்விங் நாற்காலிக்குக் கீழே –

மல்லாந்து விழுந்திருந்தார் டாக்டர்.

நெஞ்சுப் பிரதேசம் பூராவும் ரத்தச் சகதி.

## 2

தரங்கிணி காரை அந்த ஆடியோ கேஸட் கடை முன்பு நிறுத்தினாள். முற்பகல் நேரம். கூட்ட அவ்வளவாக இல்லை. கேஸட் வாங்க வந் இரண்டொருத்தர் ஷெல்ஃப்களில் அடுக் யிருந்தம கேஸட் அணிவகுப்பை நோட்ட பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



தரங்கிணி 'ச்சப்... ச்சப்...' என்ற ஸ்லிப்பர் சப்தத்தோடு உள்ளே நுழைய – கேஷ் கௌண்ட்டரில் இருந்த இளைஞன் நிமிர்ந்தான்.

"வாங்க... மேடம்..."

தரங்கிணி கேட்டாள்.

"அந்த கேஸட் வந்துடுச்சா...?"

"எந்த கேஸட்...?"

"தி லோன்லி நைட்ஸ் ஆஃப் டிஸம்பர்..."

"ஓ... அஅதுவா... வந்தது...! ஒரே ஒரு கேஸட்தான். அதையும் ஒருத்தர் வாங்கிட்டுப் போயிட்டார்."

தரங்கிணியின் முகம் கோபத்தில் சிவந்தது. "அந்த கேஸட் வேணும்ன்னு நான்தான் ஒரு வாரமா உங்க கடைக்கு நாய் மாதிரி அலைஞ்சிட்டு இருக்கேனே...? வந்த கேஸட்டை எனக்குத்தானே தரணும்..."

"ஸாரி மேடம்... நான் கடையில இல்லாதபோது – ஸேல்ஸ்மேன் யாருக்கோ அதை எடுத்து ஸேல் பண்ணிட்டான்..."

"ச்சே!" என்றாள் தரங்கிணி. "அந்த ஒரு கேஸட்டுக்காக பெங்களூர் பூராவும் அல்லஞ்சு கிடைக்காமே உங்ககிட்டே வந்தேன். நீங்களும்

ஒரு வாரத்துல தர்றேன்னு சொன்னீங்க... ஆனா இப்ப அந்த கேஸட்டை யாருக்கோ குடுத்துட்டு கையை விரிக்கிறீங்களே...? இது என்ன நியாயம்...?"

"வெரி... வெரி ஸாரி மேடம்... நாலைஞ்சு நாள் பொறுங்க. பம்பாயில் இருக்கிற என்னோட ஃப்ரண்டுக்கு லெட்டர் எழுதி – நீங்க பிரியப்பட்ட அந்த கேஸட்டை எப்படியாவது தருவிச்சி தர்றேன்..."

"எனக்கு வேண்டாம்... நாளை கழிச்சு மறுநாள் என்னோட பர்த்டே பார்ட்டி. பார்ட்டியில அந்த கேஸட் ஒலிச்சாகணும்... அதுக்கப்புறம் நீங்க கேஸட்டைக் குடுத்து பிரயோஜன மில்லை..."

தரங்கிணி படியிறங்கினாள்.

கடைக்காரன் குரல் கொடுத்தான்.

"மேடம் ஒரு நிமிஷம்..."

"எனக்கு எந்த சமாதானமும் தேவையில்லை இனிமே உங்க கடைக்கு நான் வரமாட்டேன்.. குட்பை."

தரங்கிணி வாசற்படிகளில் இறங்கி – ரோட்டின் எதிரில் நிறுத்தியிருந்த தன்னுடைய மாருதி காரை நோக்கிப் போனாள். கார் கதவின் கைப்பிடியைப்



பற்றியபோது அந்த இளைஞன் எதிர்ப்பட்டான்.

"எக்ஸ்க்யூஸ்... மீ..."

நிமிர்ந்தாள்.

இளைஞன் புன்னகைத்தான். அழகாக இருந்தான். நல்ல கறுப்பில் தலைமுடியும், புருவங்கள், மீசையும் அவனுடைய புஜத்தை எடுப்பாக்கிக் காட்டியது. பனியன் மாதிரியான சர்ட்டும் – ஜீன்ஸ் பேண்ட்டும் தரித்திருந்தான்.

"கேஸட் வாங்க வந்தீங்களா...?"

"ஆமா..."

"என்ன கேஸட்...?"

"தி லோன்லி நைட்ஸ் ஆஃப் டிஸம்பர்..."

"கிடைக்கலையா...?"

"இல்லை..."

"ஏன்...?"

"கடைக்கார மடையன்கிட்டே சொல்லி வச்சிருந்தும் அவன் எந்த மடையனுக்கோ வித்துட்டானாம்..."

இளைஞன் சிரித்தான்.

"அதை வாங்கின மடையன நான்தான்..." கையில் வைத்திருந்த கேஸட்டை அவளிடம்

நீட்டினான். கேஸட் கவரின் மேல் 'தி லோன்லி நைட்ஸ் ஆஃப் டிஸம்பர்...' - என்ற தலைப்பின் ஆங்கில வாசகங்கள் தெரிந்தன.

தரங்கிணி அதிர்ந்தாள்.

"ஸாரி உங்களைத் திட்டிட்டேன்..."

"நோ... ப்ராப்ளம்... கேஸட்டை வாங்கிக் கிங்க...! இந்த கேஸட் உங்க பிறந்த நாளுக்கு என்னோட ப்ரஸண்ட்..."

"எனக்குப் பிறந்த நாளுன்னு உங்களுக்கு எப்படி...?"

"தெரியும்ன்னு கேக்கறீங்களா...?" வேற ஒரு கேஸட்டை வாங்கறதுக்காக நான் கடையை நெருங்கின சமயத்துலதான் நீங்க கடைக்காரனை கேஸட் கிடைக்காத ஆத்திரத்தில் குதறி எடுத்துட்டு இருந்தீங்க... நீங்க பேசினதையெல்லாம் கேட்டுக்கிட்டு மறைவா நின்னுட்டிருந்தேன்... இந்த கேஸட் மேல உங்களுக்கு அவ்வளவு பிரியமா..."

"பிரியமில்லை... உயிர்... மைக்கேல் ஜாக்ஸனோட ஒவ்வொரு பாட்டும் எனக்கு மூச்சுக் காத்து மாதிரி..."

"எனக்கும் அப்படித்தான்..."



"உங்க பேரை தெரிஞ்சுக்கலாமா...?"

"தெரிஞ்சுக்கலாம்... என் பேர் அருணகிரி..."

"எங்கே ஒர்க் பண்றீங்க...?"

"நான் ஜாப்ல இல்லை... பிஸினஸ் பண்றேன்."

"என்ன பிஸினஸ்...?"

"இண்டீரியர் டெக்கரேடிவ் மெட்டீரியல்ஸுக்காக ஏஜென்ஸி ஒண்ணை வெச்சு நடத்திட்டு இருக்கேன்... உங்க பேரு...?"

"தரங்கிணி"

"படிக்கிறீங்களா...?"

"ம்... பி.ஏ. பண்றேன்..."

"எந்த காலேஜ்..."

"விஸ்வேஸ்வரய்யா ஆர்ட்ஸ் காலேஜ்ல...! இந்த கேஸட்டை நானே வெச்சுக்கலாமா...?"

"நான்தான் ப்ரஸண்ட் பண்ணிட்டேனே...?"

"தேங்க்யூ..."

காரின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள் தரங்கிணி. ட்ரைவிங் சீட்டில் நிரம்பி இக்னீஷியனை உசுப்பியபோது - அருணகிரி குனிந்தான். "பார்த்தீங்களா...? மறந்துட்டுப்

போறீங்களே...?

நெற்றியை அழகாய் சுருக்கினாள் தரங்கிணி.

"மறந்துட்டுப போறேனா...? எதை...?"

"உங்களுக்கு பிறந்த நாள் என்னிக்கு...?"

"நாளை கழிச்சு மறுநாள்..."

"உங்க ஃப்ரண்ட்ஸையெல்லாம் இன்வைட் பண்ணிட்டீங்களா...?"

"பண்ணிட்டேனே..."

"நான் உங்களுக்கு ஃப்ரண்ட் மாதிரி தோணலையா...? என்னை பர்த்டே ஃபங்ஷனுக்கு சுவப்பிடாமலே போறீங்களே...?"

தரங்கிணி தர்மசங்கடமாய் நெளிந்தாள். 'ஒரு கேஸட்டைக் கொடுத்துவிட்டு இவ்வளவு உரிமை எடுத்துக் கொள்கிறானே...?'

"என்ன யோசிக்கறீங்க...?"

"நீ... நீ... நீங்களும் வாங்களேன்..."

"இடம்...?"

தன் வீட்டு அட்ரஸைச் சொன்னாள் தரங்கிணி.

இது எவ்வளவு பெரிய தப்பு என்பது பின்னால்தான் அவளுக்குப் புரிந்தது.



# 3

இன்ஸ்பெக்டர் ந்வநீதசிருஷ்ணனும், சப் இன்ஸ்பெக்டர் அவிநாஷும் டாக்டர் ப்ரவீண் இறந்து கிடந்த அறைக்குள் நுழைந்தார்கள். டாக்டர் ப்ரவீண் சரியாய் நெஞ்சில் சுடப்பட்டிருந்தார். ரத்தம் நெஞ்சுப் பகுதி பூராவும் திப்பித் திப்பியாய் பரவியிருந்தது. அவிநாஷ் குனிந்து பார்த்துவிட்டு நவநீதகிருஷ்ணனிடம் நிமிர்ந்தார்.

"சுட்டிருக்காங்க ஸார்..."

ரிசப்ஷனிஸ்டிடம் திரும்பினார்.

"ஏம்மா... துப்பாக்கி வெடிச்ச சத்தம் உனக்குக் கேட்கலையா...?"

ரிசப்ஷனிஸ்ட் அழுத கண்களோடு தலையாட்டினாள்.

"இல்ல ஸார்..."

"டாக்டரைப் பார்க்க வந்த அந்தப் பெண்ணோட பேர் என்னான்னு சொன்னே...?"

"நிலா... ஸார்..."

"நிலா..." உச்சரித்த நவநீதகிருஷ்ணன்

அவிநாஷிடம் திரும்பினார். "பேர் வித்தியாசமா இருக்கு... இப்படிக்கூட பேரை வெப்பாங்களா... என்ன...?"

"பகுத்தறிவுவாத குடும்பத்தில் இருக்கிறவங்க... கடவுள் பேர்களை வைக்கப் பிரியப்படாமே... இதுமாதிரி நிலா, தென்றல்ன்னு வெக்கிறது உண்டு ஸார்..."

"ஏம்மா... அந்தப் பொண்ணு... எப்படியிருந்தா...?"

"அழகாயிருந்தா ஸார்... சுருட்டை முடி. ஒரு சராசரி பொண்ணுக்கு இருக்க வேண்டிய உயரத்தை காட்டிலும் கொஞ்சம் அதிகம். ரெண்டு கண்ணும் பெரிசு பெரிசா... மை தீட்டின மாதிரி இருக்கும். .. ட்ரஸ் மஞ்சள் சுடிதார். கைனடிக் ஹோண்டாவில் வந்தா..."

"வண்டி நெம்பரைப் பார்த்தியா...?"

"இல்ல ஸார்..."

"சரி... வண்டி என்ன கலர்...?"

"சில்வர் க்ரே..."

"வண்டி புதுசு மாதிரி இருந்ததா...? இல்லை பழசா...?"

"சரியா கவனிக்கலை ஸார்..."



"பேஷண்ட்ஸ் யாரையும் வெளியே அனுப்பலையே...?"

"இல்ல ஸார்..."

அவிநாஷ்! நீங்க பேஷண்ட்ஸை என்கொயர் பண்ணி அந்தப் பெண் நிலா வந்த வண்டி நெம்பரை யாராவது கவனிச்சிருக்காங்களான்னு கன்ஃபார்ம் பண்ணிக்கிங்க..."

அவிநாஷ் தலையசைத்துவிட்டு வெளியேறினார். நவநீதகிருஷ்ணன் ரிசப்ஷனிஸ்ட்டை ஏறிட்டார்.

"உன் பேர் என்னம்மா...?"

"சுகன்யா..."

"எத்தனை வருஷமா டாக்டர்கிட்டே வேலை பார்க்கிறே?"

"இரண்டு வருஷமா..."

"நிலா எதுக்காக டாக்டரைப் பார்க்க வந்ததாய் சொன்னா?"

"காரணத்தைச் சொல்லாமலே பர்சனல்ன்னு சொன்னா...! நான் டாக்டர்கிட்டே இண்ட்டர்காம்ல பேசி... நிலா வந்திருக்கிற விவரத்தைச் சொன்னேன்."

"அதுக்கு... டாக்டர் என்ன சொன்னார்?"

"அடுத்த பேஷண்ட்டை பார்த்து முடிச்சதும்... நிலாவை உள்ளே அனுப்புன்னு சொன்னார். நானும் அடுத்த பேஷண்ட்டை..."

சட்டென்று பேச்சை நிறுத்தியவளின் முகம், உடனடியாய் ஒரு பிரகாசத்துக்குப் போயிற்று.

"ஸ... ஸார்..."

"என்னம்மா...?"

"அந்தப் பெண் யார்ங்கிறதை சுலபமா கண்டுபிடிச்சுடலாம் ஸார்"

"எப்படி...?"

"அவ டாக்டரைப் பார்க்கிறதுக்காக காத்திட்டிருந்தப்ப ஒரு பேஷண்ட்டோட ஹஸ்பெண்ட் அவகூட சகஜமாகப் பேசிட்டிருந்தார். ரெண்டு பேருக்கும் மத்தியில் ஒரு அன்னியோன்யம் இருந்தது. ஒரு அஞ்சு நிமிஷ நேரமாவது பேசிட்டிருந்திருப்பாங்க..."

"அந்த ஆள் பேரென்ன...?"

"இருங்க ஸார்... அப்பாயிண்ட்மெண்ட் லெட்ஜர்ல பார்த்துட்டு வந்துடறேன்..." - சொன்னவள் வேகவேகமாய் போய் பார்த்துவிட்டு வந்தாள்.



"அவர் பேர் அருண் சார்..."

"அட்ரஸ்...?"

குறித்துக் கொண்டு வந்த பேப்பரை நவநீதகிருஷ்ணனிடம் நீட்டினாள் சுகன்யா. அவர் வாங்கிப் பார்த்தார்.

அருண்

ப்ளாட் நெம்பர் 26,

506, துங்கபத்ரா தெரு,

மகாகவி பாரதியார் நகர்,

கோவை.

நவநீதகிருஷ்ணன் அட்ரஸை பத்திரப்படுத்திக் கொண்டு கேட்டார். "அருணும், நிலாவும் என்ன பேசிக்கிட்டாங்க..."

"சரியா ஹியர் பண்ண முடியலை ஸார்..."

"டாக்டர் ப்ரவீனுக்கு ஃபேமிலி...?"

"அவருக்கு ஃபேமிலி கிடையாது ஸார்... அவர் தனியாகத்தான் இருக்கார்..."

"வீடு...?"

"இதேதான்... பக்கத்து அறைதான் அவரோட பெட்ரூம்."

"டாக்டர் துப்பாக்கியாலே சுடப்பட்டிருக்கார்...

அது ஸைலென்சர் பொருத்தப்பட்ட துப்பாக்கியாய் இருந்ததினால... உனக்கு வெடிக்கிற சத்தம் கேட்காமே இருந்திருக்கலாம். ஆனா டாக்டர் கீழே விழுந்த சத்தமோ... மேஜை மேலிருந்து உருண்டு விழுந்த மத்த பொருட்களோட சத்தமோ எப்படி கேட்காமே இருந்திருக்க முடியும்...?"

"ஸார்... இந்த ரூம் சவுண்ட் ஃப்ரூப் ரூம்... உள்ளே என்ன சத்தம் போட்டாலும் வெளியே வராது..."

"ஒரு பேஷண்ட் வெளியே வந்ததும் - இன்னொரு பேஷண்ட் உள்ளே வரலாம்கிறதுக்காக - டாக்டர் காலிங் பெல் குடுப்பார்ன்னு சொன்னியேம்மா...? அது மட்டும் எப்படி கேட்கும்..."

"காலிங் பெல்லுக்கு வெளியே கனெக்ஷன் இருக்கு ஸார்..."

சுகன்யா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவினாஷ் உள்ளே வந்தார்.

"வண்டி நெம்பரை யாரும் நோட் பண்ணலை சார்."

"நோ ப்ராப்ளம் அவினாஷ்... கையில் ஒரு அட்ரஸ் இருக்கு... சிரமப்படாமே நிலா யாருங்கிறதைக் கண்டு பிடிச்சுடலாம்..."



"எப்படி சார்...?"

"ஃபாரன்ஸிக்குப் போன் பண்ணிட்டு வாங்க... சொல்றேன்."

# 4

"மெனி... மெனி... ஹேப்பி ரிட்டர்ன்ஸ் ஆஃப் த டே..." சொல்லிக்கொண்டே கையில் இருந்த பொக்கேயை தரங்கிணியிடம் நீட்டினான் அருணகிரி.

அசத்துகிற மாதிரியான பிறந்தநாள் ட்ரஸ்ஸில் இருந்த தரங்கிணி அதைப் புன்னகையோடு வாங்கிக் கொண்டாள்.

"தாங்க் யூ..."

சுற்றிலும் பிறந்தநாள் கோலாகலம். ஆண்களும், பெண்களும் கைகளில் கூல்ட்ரிங்க்ஸை ஏந்தியிருந்தார்கள்.

"உங்க வீடு அற்புதமாயிருக்கு..."

"இந்த வீடு எங்க தாத்தா அந்தக் காலத்துல கட்டினது... கொஞ்சம் மார்ட்டனைஸ் பண்ணியிருக்கோம்... அவ்வளவுதான். எங்கப்பாவை மீட் பண்றீங்களா...?"

"வித் ப்ளஷர்..."

சிரித்துப் பேசிக்கொண்டிருந்த ஒரு வழுக்கைத் தலை நபரிடம் தரங்கிணி கூட்டிக்கொண்டு போனாள்.

"அப்பா..."

"என்னம்மா...?"

"மீட் மிஸ்டர் அருணகிரி..."

"ஓ... உனக்குப் பிரியமான... ஆடியோ கேஸட்டை குடுத்தவர்தானே...?"

"அவரேதான்...! பேசிட்டிருங்கப்பா... என்னோட ஃப்ரண்ட்ஸ் வந்துட்டே இருக்காங்க... ரிசீவ் பண்ணணும்...."

தரங்கிணி போய்விட, அருணகிரியை அவளுடைய அப்பா சங்கரன் ஏறிட்டார். "தரங்கிணிக்கு ஃபாரின் மியூசிக்கல் ஆடியோ கேசட்ன்னா உயிர்...! ஒரே கேசட்டை திரும்பத் திரும்ப போட்டு விடிய விடிய கேட்டுக்கிட்டு இருப்பா..."

"எனக்கும் அந்த டேஸ்ட் உண்டு சார்..."

சங்கரன் சிரித்தார்.

"எனக்கென்னமோ வெளிநாட்டு சங்கீதம் பிடிக்கலை. எந்த சிங்கரை எடுத்துக்கிட்டாலும்



சரி, ஒரே காட்டுக் கத்தலா கத்தறான்... ஒரு செம்மங்குடி மாதிரி, எம்.எஸ்.சுப்புலட்சுமி மாதிரி ஒருத்தராவது அங்கே உண்டா?"

"எங்கள மாதிரியான யூத்ஸ்க்கு... லைட் ம்யூசிக்தான் பிடிக்கும் சார்..." அருணகிரி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மைக்கில் அந்த அறிவிப்பு கேட்டது.

"தரங்கிணியின் பிறந்தநாள் விழாவுக்கு வருகை தந்திருக்கும் நண்பர்களே! இப்போது அந்த விழாவை ஒட்டி 'பாஸ் ஆன்' என்கிற வேடிக்கையான விளையாட்டு ஆரம்பமாக உள்ளது. ஒரு பரிசு பாக்கெட் ஒவ்வொருவரின் கைக்கும் மாறிக்கொண்டே வரும். அதே சமயத்தில் மியூசிக்கும் போய்க் கொண்டிருக்கும். மியூசிக் நிற்கிற நேரத்தில் – பரிசு பாக்கெட் யார் கையில் இருக்கிறதோ அவர்கள் மேஜையின் மீது வைத்திருக்கும் டப்பாவுக்குள் கையை நுழைத்து சீட்டு ஒன்றை எடுக்க வேண்டும். அந்த சீட்டில்... என்ன எழுதியிருக்கிறதோ அதன்படி செய்ய வேண்டியது அவர்கள் கடமை. யாரும் தட்டிக்கழிக்கக் கூடாது. இப்போது போட்டி தொடங்குகிறது..."

இசை ஒலிக்க ஆரம்பித்தது. பரிசு பாக்கெட் கைமாற ஆரம்பித்தது.

ஐந்து கைகள் மாறியது. பாக்கெட் ஒரு வயதான பெரியவருக்கு போக இசை நின்றது. ஒரே ஆரவாரம்.

பெரியவர் ஒரு சீட்டை எடுத்தார். பக்கத்தில் இருந்தவர் அதை வாங்கிப் பிரித்து பலமாய் படித்தார்.

"உங்கள் மனைவியோடு சேர்ந்து ராக்கம்மா கையைத் தட்டு என்ற பாடலைப் பாடிக்கொண்டே ரஜினிகாந்த் மாதிரி ஆடிக் காட்டவும்."

சிறிதுகூட வெட்கப்படாமல் மைக்கிற்கு முன்னால் நின்று ரஜினிகாந்த் ஸ்டைலில் தன் நரை கிராப்பைக் கோதிக்கொண்டு நடுக்கமான குரலில் 'ராக்கம்மா கையைத் தட்டு...' என்று பாட ஆரம்பித்து உடம்பை வளைத்து நடனமாட –

ஹாலில் கைத்தட்டல் எழுந்து – அடங்க நேரமாயிற்று.

அதற்குப் பின் நிகழ்ச்சி தொடர்ந்து. பரிசு பாக்கெட் ஒவ்வொருவரின் கைக்கும் மாற, அருணகிரியின் கைக்கு வந்தபோது இசை நின்றது.

அருணகிரி டப்பாவில் இருந்த சீட்டை எடுக்க, பக்கத்தில் இருந்த சங்கரன் அதை வாங்கி பிரித்துப் படித்தார்.



"மகா அறுவை ஜோக் ஒன்றைச் சொல்லவும்..."

அருணகிரி நடந்து போய் மைக்குக்கு முன்பாய் நின்றான்.

"எதைப் போட்டால் சாம்பார் தங்கமாய் மாறும்?"

கூடியிருந்தவர்கள் முணுமுணுப்புகளோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். அருணகிரி மறுபடியும் கேள்வியைக் கேட்டான்.

"எதைப் போட்டால் சாம்பார் தங்கமாய் மாறும்?"

"தெரியவில்லை."

கும்பல் கோஷித்தது.

"நானே சொல்லட்டுமா?"

"ம்... சொல்லுங்கள்."

"சாம்பார் தங்கமாய் மாற வேண்டுமானால் அதில் 24 காரட்டைப் போட வேண்டும்..."

"ஓ.... ஹோஹ்ஹ...!"

ஹால் முழுக்க சிரிப்பலைகள்.

தரங்கிணி வேகவேகமாய் பக்கத்தில் வந்து கிசுகிசுத்தாள்.

"அருணகிரி... உங்க அறுவை ஜோக் க்ளாசிக்..."

"கைவசம் அது மாதிரி நிறைய இருக்கு..."

பாஸ் ஆன் - தொடர்ந்து நடக்கும் உற்சாகத்தில் மற்றவர்கள் இருக்க, அருணகிரி தரங்கிணியிடம் குனிந்தான்.

"நாளைக்கு சாயந்தரம்... நான் உங்களுக்கு ஒரு பர்த்டே பார்ட்டி தரப்போறேன்... வில் யூ அக்செப்ட்?"

"எனக்கு மட்டுமா?"

"ஆமா..."

"பார்ட்டி எங்கே?"

"உங்களுக்கு ப்ரியமான ஹோட்டல்ல வெச்சுக்கலாம்."

"நான் கொஞ்சம் காஸ்ட்லி."

"எனக்கும் காஸ்ட்லிதான் பிடிக்கும்."

"ஹோட்டல் கோல்ட் மைன்."

"நோ ப்ராப்ளம்... நான் ரெடி."

"எத்தனை மணிக்கு வரட்டும்?"

"சாய்ஸ் ஈஸ் யுவர்ஸ்..."

"ஏழு மணிக்கு...?"

"வெல்கம்..."



# 5

மகாகவி பாரதியார் நகருக்குள், துங்கபத்திரா தெருவைத் தேடிக் கண்டுபிடித்து பிளாட் நெம்பர் 26க்கு முன்னால் ஜீப்பை நிறுத்தினார் நவநீதகிருஷ்ணன்.

வாசலில் சின்னதாய் அந்தக் கும்பல் தெரிய உள்ளே காக்கி யூனிஃபார்ம்கள்.

அவிநாஷ் நவநீதகிருஷ்ணனின் காதருகே கிசுகிசுத்தார்.

"சார்... என்னவோ விபரீதம்...?"

"உள்ளே இருக்கிறது சப்-இன்ஸ்பெக்டர் வடிவேல் மாதிரி தெரியுது..."

"அவரேதான் சார்..."

யாரையோ விசாரித்துக் கொண்டிருந்த சப்-இன்ஸ்பெக்டர் வடிவேல் நவநீதகிருஷ்ணனைப் பார்த்துவிட்டு வேகவேகமாய் வந்து சல்யூட் செய்தார்.

"ஸார்..."

"வடிவேல்...! என்ன ப்ராப்ளம் இங்கே?"

"சார் இந்த ப்ளாட்ல குடியிருந்த அருண்கிறவரும், அவரோட மனைவி சௌந்தரமும் கடுமையான தீக்காயங்களோட ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணப்பட்டிருக்காங்க..."

"தீக்காயங்களோடவா...?"

"ஆமா... சார்..."

"என்ன காரணம்?"

"கணவன் மனைவிக்குள்ளே ஏதோ தகராறு...! சௌந்தரம் ஒரு ஹிஸ்டீரியா டைப். லேசா மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததாயும் தகவல். மனைவியோட மனநலத்தை குணப்படுத்துறதுக்காக அருண் ஒரு சைக்கியாட்ரிஸ்ட்டை கன்சல்ட் பண்ணிட்டு வந்து மனைவி சௌந்தரத்துக்கிட்ட அதைப்பத்தி சொல்லியிருக்கார். அதுக்கு சௌந்தரம் வரமாட்டேன்னு அடம் பிடிச்சிருக்கா... அருணுக்கு கோபம் வந்து அடிச்சிருக்கார். உடனே அந்தப் பொண்ணு சமையலறைக்கு ஓடிப்போய் மண்ணெண்ணெய்யை எடுத்து ஊத்திக்கிட்டு தீ வெச்சிக்கிச்சு. அருண் காப்பாத்தப் போயிருக்கார். அந்தப் பொண்ணு அவரையும் விடாமே... கட்டிப் பிடிக்கவே...



ரெண்டு பேருக்குமே உடம்பு பூராவும் தீக்காயம்..."

"ஹாஸ்பிடலுக்கு கொண்டு போயிட்டீங்களா?"

"இப்பத்தான், அஞ்சு நிமிஷத்துக்கு முந்திதான் கொண்டு போனோம்."

"சம்பவம் நடந்ததைப்பத்தி ஸ்டேட்மெண்ட் குடுத்தது யாரு?"

"வீட்டு வேலைக்காரி! சம்பவத்தைப் பார்த்ததுக்கான ஐவிட்னஸ் அவதான்."

"அட்மிட் பண்ணப்பட்டவங்களோட கண்டிஷன் எப்படியிருக்கு?"

"ரெண்டு பேருக்குமே உடல் கருகியிருக்கு... நெருப்புக் காயங்களோட டெப்த் பர்சண்டேஜ் எவ்வளவுன்னு தெரியலை..."

"அவங்க ரெண்டுபேரை தவிர இந்த வீட்ல ஃபேமிலி மெம்பர் வேற யாரு?"

"வேற யாருமில்லை... ரெண்டே பேர்தான்."

நவநீதகிருஷ்ணனும் அவிநாஷும் திரும்பினார்கள். ஜீப் ஜி.ஹெச்சை நோக்கிப் போயிற்று.

# 6

ஹோட்டல் கோல்ட் மைன்.

ரெஸ்டாரெண்டின் ஏ.சி. காற்றை சுவாசித்தபடி, வெஜிடபிள் கட்லெட்டை ஜாமில் நனைத்து ஸ்பூனால் துண்டாக்கி வாய்க்கு கொடுத்துக் கொண்டிருந்தார்கள் அருணகிரியும் தரங்கிணியும்.

"மார்ச் ஃபீவர் - கேசட் கேட்டிருக்கீங்களா தரங்கிணி?"

"ஜாக்சனோடதுதானே!"

"ஆமா..."

"அந்த கேசட் எங்கே கிடைக்கும்?"

அருணகிரி தோள்களைக் குலுக்கி –

"இவ்விடம்..." என்றான்.

"குடுங்க... பார்க்கலாம்..."

"என் வீட்ல இருக்கு..."

"கிளம்புங்க போலாம்..."

"ஊஹூம்... மொதல்ல டின்னர் அப்புறம்தான் கேசட்..."



"இனிமே எனக்கு டின்னர் பிடிக்காது. அந்த கேசட் உங்களுக்கு எப்படி கிடைச்சது?"

"என்னோட ஃப்ரெண்ட் புதுப்புது கேசட்டுகளை அப்பப்ப அனுப்பிகிட்டே இருப்பான்."

"மார்ச் ஃபீவர் - எப்படியிருக்கு?"

"அமர்க்களம்... அந்த கேசட்டை உங்களுக்கே தர்றேன் வெச்சுக்குங்க..."

"தேங்க்யூ... ஏ... லாட்..."

"தரங்கிணி..."

"ம்..."

"நீங்க... இந்த ஹோட்டலுக்கு வந்து என்னோட டின்னர் சாப்பிடறது உங்க அப்பாவுக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"பின்னே வீட்டை விட்டு வெளியே வரும்போது என்ன சொல்லிட்டு வந்தீங்க?"

"நான் எதுவும் சொல்ல மாட்டேன். அப்பாவும் எங்கே போறேன்னு கேட்க மாட்டார். அம்மா உயிரோடு இருந்தா இந்த சுதந்திரம் எனக்குக் கிடைச்சிருக்காது."

இருவரும் டின்னரை முடித்தபோது –

எட்டரை மணி.

"நான் என்னோட பைக்ல முன்னாடி போறேன். நீங்க கார்ல ஃபாலோ பண்ணிட்டு வாங்க..."

"நீங்களும் என் கார்லேயே வரலாமே...?"

"வேண்டாம்... திரும்பவும் பைக்கை எடுத்துட்டு போறதுக்காக ஆறு கிலோமீட்டர் நான் வரணும்..."

அடுத்த சில விநாடிகளில் - பைக் ரோட்டில் விரைந்து கலக்க மாருதி அதை மோப்பம் பிடித்துக்கொண்டு பின்தொடர்ந்தது.

# 7

ஜி.ஹெச்.

நவநீதகிருஷ்ணனும் அவிநாஷும் ஐ.எ யூனிட்டிலிருந்து எதிர்பட்ட டாக்டரை மறிக்சி மாதிரி நின்றிருந்தார்கள்.

"டாக்டர்! இப்ப நிலைமை எப்படியிருக்கு?"

"இரண்டு பேருமே இன்னும் அபாய கட்டத்தை தாண்டலை. ட்ரீட்மெண்ட் ஈஸ் கோயி



ஆன்..."

"ஹோப்ஸ்...?"

"எதுக்கும் இந்த ராத்திரி தாண்டணும்..."

"நடுவில் கான்ஷியஸ் திரும்புமா?"

"திரும்பலாம். ஆனா எதையுமே நிச்சயமா சொல்றதுக்கு இல்லை."

"அவங்களை பார்க்கலாமா?"

"ஸாரி... ரெண்டு பேரையுமே இன்பெக்ஷனை அவாய்ட் பண்றதுக்காக... க்ளாஸ் ரூம்ல வெச்சிருக்கோம். ஒரு மணிநேரம் கழிச்சு நீங்க போய் பார்க்கலாம். அதுவரைக்கும் என்னோட ரூம்ல வெயிட் பண்ணலாம்."

"தேங்க் யூ... டாக்டர்."

ஒரு அரைமணி நேரத்தைக் கரைத்திருந்தபோது -

அந்த நர்ஸ் வேகவேகமாய் உள்ளே வந்தாள்.

"சார்... உங்களை டாக்டர் கூப்பிட்டார்."

"எங்கே இருக்கார்?"

"ஐ.ஸி. யூனிட்ல..."

டாக்டர் கவலையாய் காத்திருந்தார். துயரக் குரலில் சொன்னார்.

"அந்தப் பெண் இறந்துட்டா.."

"ஹஸ்பெண்ட்...?"

"நோ ஹோப்ஸ்... பட் கான்ஷியஸ் திரும்பியிருக்கு... நீங்க பேசறதாயிருந்தா பேசலாம்."

இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

அருண் கருகிய ரொட்டித் துண்டு மாதிரி கட்டிலில் தெரிந்தான். மார்பு இரைத்துக் கொண்டிருந்தது. நவநீதகிருஷ்ணன் குனிந்தார்.

"அருண்..."

குரலைக் கேட்டதுமே அவனுடைய விழிகள் சட்டென்று சுருங்கி பின் விரிந்தன.

"அருண்..."

"ம்ம்ம்..." முனகல் சிரமமாய் எழுந்தது.

"அருண்...! நிலாங்கிற பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?"

"நி...நி...நி..."

அருணுக்கு நாக்குப் புரளாமல் அட பிடித்தது.

"சொல்லுங்க அருண்... நிலா யாரு? அ அட்ரஸ் என்ன?"



அருண் விழிகள் ஸ்தம்பித்து ஸ்தம்பித்து நகர்ந்தது. உதடுகள் ஓயாமல் துடித்தது.

"அருண்...! நிலா எங்கே இருக்கா?"

அருணின் உடம்புத் துடிப்புகள் அனைத்தும் அடங்க, டாக்டர் பக்கத்தில் வந்து சோதித்து பின் நிமிர்ந்தார்.

"ஹி ஈஸ் டெட்...!"

# 8

நகரின் ஒதுக்குப்புறத்தில் தனியாய் நின்றிருந்த வீட்டுக்குள் பைக்கை நுழைத்து போர்டிகோவில் மௌனமாக்கினான் அருணகிரி. பின்னாலேயே மாருதியும் நுழைந்து நின்றது.

தரங்கிணி இறங்கி சுற்றும்முற்றும் பார்த்தாள். எல்லா திசைகளிலும் சில்வண்டு இரைந்தது.

"இது உங்க சொந்த வீடா? வாடகை வீடா?"

"வாடகை வீடுதான்."

"வாடகை வீடுன்னா...இவ்வளவு தூரம் தள்ளி ஏன் இருக்கீங்க? சிட்டியிலே வீடு கிடைக்காதா

என்ன?"

"எனக்கு இப்படி ரிமோட் ப்ளேஸ்ல இருக்கிறதுதான் பிடிக்கும்."

"இது என்ன ஏரியா?"

"கல்பனா அவென்யூன்னு சொல்வாங்க."

தரங்கிணிக்கு முதன்முதலாய் பயம் வந்தது.

"என்ன தரங்கிணி அப்படியே நின்னுட்டீங்க... ப்ளீஸ் கம்..."

"நா... நான் சீக்கிரம் கிளம்பணும்..."

"ரெண்டே நிமிஷத்துல போயிடலாம்... உள்ளே வாங்க."

தரங்கிணி உள்ளே நுழைந்தாள்.

"உட்காருங்க தரங்கிணி...."

தரங்கிணி சுற்றும் முற்ற பார்த்துக்கொண்டே சோபா ஃபோமி புதைந்தாள். நெற்றி லேசாய் வியர்த்தது.

'சீக்கிரம் கேசட்டை வாங்கிக்கொண்டு கிள வேண்டும். வீடு இருக்கிற ஏரியா சரியில்லை.

"ஒரு நிமிஷம்..." உள்ளே போன அருண கையில் கேசட்டோடு வந்தான்.

"இந்தாங்க தரங்கிணி. இதுவும் என்னே



ப்ரஸண்ட்டேஷன்தான். இது மட்டுமில்லை. இனிமே புதுசா வரப்போகிற எந்த கேசட்டும் உங்களுக்கு ப்ரஸண்ட்தான்."

"தாங்க்ஸ்."

கேசட்டை ஆர்வமாய் வாங்கிக் கொண்டவள் நகர்ந்தாள்.

"நான் வரட்டுமா...? ஏகப்பட்ட லேட்டாயிடுச்சு..."

"கிளம்பறீங்களா? ஏதாவது கூல் ட்ரிங்க்..?"

"ஒண்ணும் வேண்டாம். கொஞ்ச நேரத்துக்கு முந்திதானே டின்னர் சாப்பிட்டோம்."

"தரங்கிணி! எனக்காக ஒரு நிமிஷம் உட்கார முடியுமா?"

"எ... என்ன விஷயம்?"

"ஏன் இப்படி வேர்த்து வழியறீங்க... என் மேல உங்களுக்கு நம்பிக்கை வரலைன்னு தெரியும்."

"நோ... நோ... அப்படியெல்லாம் இல்லை. வீட்டுக்கு நேரமாச்சேன்னுதான்..."

"ஒரே ஒரு நிமிஷம் உட்கார்ந்தா போதும்...."

உட்கார்ந்தாள்.

அருணகிரி சொன்னான். "எனக்கு எதையுமே

என்ன?"

"எனக்கு இப்படி ரிமோட் ப்ளேஸ்ல இருக்கிறதுதான் பிடிக்கும்."

"இது என்ன ஏரியா?"

"கல்பனா அவென்யூன்னு சொல்வாங்க."

தரங்கிணிக்கு முதன்முதலாய் பயம் வந்தது.

"என்ன தரங்கிணி அப்படியே நின்னுட்டீங்க... ப்ளீஸ் கம்..."

"நா... நான் சீக்கிரம் கிளம்பணும்..."

"ரெண்டே நிமிஷத்துல போயிடலாம்... உள்ளே வாங்க."

தரங்கிணி உள்ளே நுழைந்தாள்.

"உட்காருங்க தரங்கிணி...."

தரங்கிணி சுற்றும் முற்ற பார்த்துக்கொண்டே சோபா ஃபோம புதைந்தாள். நெற்றி லேசாய் வியர்த்தது.

'சீக்கிரம் கேசட்டை வாங்கிக்கொண்டு கிள வேண்டும். வீடு இருக்கிற ஏரியா சரியில்லை.

"ஒரு நிமிஷம்..." உள்ளே போன அருண கையில் கேசட்டோடு வந்தான்.

"இந்தாங்க தரங்கிணி. இதுவும் என்னே



ப்ரஸண்ட்டேஷன்தான். இது மட்டுமில்லை. இனிமே புதுசா வரப்போகிற எந்த கேசட்டும் உங்களுக்கு ப்ரஸண்ட்தான்."

"தாங்க்ஸ்."

கேசட்டை ஆர்வமாய் வாங்கிக் கொண்டவள் நகர்ந்தாள்.

"நான் வரட்டுமா...? ஏகப்பட்ட லேட்டாயிடுச்சு..."

"கிளம்பறீங்களா? ஏதாவது கூல் ட்ரிங்க்..?"

"ஒண்ணும் வேண்டாம். கொஞ்ச நேரத்துக்கு முந்திதானே டின்னர் சாப்பிட்டோம்."

"தரங்கிணி! எனக்காக ஒரு நிமிஷம் உட்கார முடியுமா?"

"எ... என்ன விஷயம்?"

"ஏன் இப்படி வேர்த்து வழியறீங்க... என் மேல உங்களுக்கு நம்பிக்கை வரலைன்னு தெரியும்."

"நோ... நோ... அப்படியெல்லாம் இல்லை. வீட்டுக்கு நேரமாச்சேன்னுதான்..."

"ஒரே ஒரு நிமிஷம் உட்கார்ந்தா போதும்...."

உட்கார்ந்தாள்.

அருணகிரி சொன்னான். "எனக்கு எதையுமே

மனசுல போட்டு மூடி வெச்சுகிட்டு புழுங்கறதுல
விருப்பம் கிடையாது. உங்களை எனக்கு
பிடிச்சிருக்கு. நீங்க என்னை விரும்பறீங்களா
இல்லையான்னு எனக்குத் தெரியாது. இப்ப
அதை தெரியப்படுத்திட்டீங்கன்னா
பரவாயில்லை."

தராங்கிணி முகம் சிவந்தாள்.

"உங்க மனசுல இந்த மாதிரியான எண்ண
இருக்கும்னு நான் நினைக்கலை.... ஸாரி.
வர்றேன்..."

"நில்லுங்க... உங்க பேச்சை பார்த்தா நீங்
என்னை விரும்பலைன்னு தோணுது.
பரவாயில்லை... ஆனா ஒரே ஒரு கேள்விக்
மட்டும் பதில் சொல்லிட்டுப் போங்க."

"என்ன?"

"வேற யாரையாவது நீங்க விரும்பறீங்களா

"ஆமா..."

"யாரை?"

"என்னோட அத்தை மக
கல்யாணகுமாரை..."

"கல்யாணகுமார் இப்ப எங்கே?"

"மும்பையில ஒரு கம்பெனியி



மார்க்கெட்டிங் மானேஜரா இருக்கார். இந்த வருஷ கடைசிக்குள்ளே கல்யாணம் நடக்கலாம்."

"ஸ்வீட் நியூஸ்... என்னோட அட்வான்ஸ் கங்கிராட்ஸ்."

"தேங்க்ஸ்! நான் வர்றேன்."

வேகமாய் நடந்து வாசல் கதவை நெருங்கினாள்; கைப்பிடியைப் பற்றி இழுத்தாள்.

கதவு அசைய மறுத்தது.

அரை நிமிஷ நேரம் கதவைத் திறக்கப் போராடியவள் பயந்த விழிகளோடு சோபாவில் உட்கார்ந்திருந்த அருணகிரியை ஏறிட்டாள். அவன் புன்னகைத்தான்.

"என்ன தரங்கிணி கதவு லாக் ஆயிடுச்சா... அந்தக் கதவு எப்பவும் இப்படித்தான். கொஞ்சம் அழகான பெண்ணை பார்த்துட்டா போதும். தானா லாக் பண்ணிக்கும். லாக் சிஸ்டத்தோட அமைப்பு அப்படி. அந்த சபலக்கார கதவு லாக்கை ரிலீஸ் பண்ணனும்னா நீ சின்னதா ஒரு காரியம் பண்ணினா போதும். உன் உடம்புல ஒரு பொட்டுத் துணி இல்லாம... அந்த லாக்கைப் பிடிச்சு இழுத்தியான்னா கதவு திறந்துக்கும்..."

தரங்கிணி திக்கென்று அருணகிரியைப்

பார்க்க அவன் ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

# 9

டி.எஸ்.பி.க்கு முன்னால் நவநீத
கிருஷ்ணனும், அவிநாஷும் நின்றிருக்க, அவ
கேஸ் ஹிஸ்டரி ஃபைலை புரட்டியப
சம்பாஷித்தார்.

"அந்த நிலாவைப் பற்றி அருண் எதுவுமே
சொல்லலை?"

"சொல்ல முயற்சி பண்ணினான் சார்.
ஆனா, அவனால பேச முடியலை... சி
விநாடிகளிலேயே செத்துட்டான்..."

"அருணோட ரிலேட்டிவ்ஸ்... ப்ரண்ட்ஸ்கிட்ட
நிலாவைப்பத்தி கேட்டீங்களா?"

"கேட்டோம் ஸார்..."

"வாட் வாஸ் த ரிப்ளை..."

"யாருக்குமே நிலாவைப்பத்தி தெரியலை
சார்..."

டி.எஸ்.பி. ஃபைலை மூடிவிட்டு எழுந்தா



"சம்திங் ஸ்ட்ரேன்ஜ்... ஒரு பெண் அவ்வளவு தைரியமா வந்து பேஷண்ட்ஸ் வெளியே காத்திட்டிருக்கும்போதே டாக்டர் பிரவீணை துப்பாக்கியால் சுட்டுக் கொலை பண்ணியிருக்கா..."

"ரிசப்ஷனிஸ்ட் அடையாளங்களைச் சொல்லியிருக்கா, எப்படியும் ட்ரேஸ் பண்ணிடலாம் சார்..."

"ஃபர்தரா என்ன ஸ்டெப்ஸ் எடுத்திருக்கீங்க?"

"எல்லா பேப்பர்ஸுக்கும் நியூஸ் குடுத்திருக்கோம் ஸார்... அந்தப் பெண்ணோட அடையாளங்களையும் குறிப்பிட்டிருக்கோம்."

"பேப்பர்ல எத்தனை நாளா நியூஸ் வருது?"

"கடந்த ரெண்டு நாளா ஸார்..."

"டாக்டர் பிரவீண் கொலை செய்யப்பட்ட அறையில் ஃபாரன்ஸிக்கிற்கு ஏதாவது ஃபிங்கர் பிரிண்ட்ஸ் கிடைச்சிருக்கா?"

"பார்ட்டிகுலரா எதுவும் கிடைக்கலை சார்... பட் பிரேக்கபிள் பிரிண்ட்ஸ் கிடைச்சிருக்கு... அது எவ்வளவு தூரம் கேஸுக்கு உதவும்னு தெரியலை..."

நவநீதகிருஷ்ணன் சொன்ன விநாடி –

இண்டர்காம் முனகியது. டி.எஸ்.பி. ரிசீவ
எடுத்து செவிமடுத்தார். "எஸ்..."

"சார்... நான் சி.ஐ. பேசறேன். டாக்டர் பிரவீ
கொலை சம்மந்தமா... பேப்பர்ல வந்
நியூஸைப் படிச்சிட்டு ஒரு யூத் வந்திருக்கா
ஸார். நிலாங்கிற பெண்ணைப் பற்றி அவனுக்
ஏதோ தகவல்கள் கிடைச்சிருக்கு..."

"ஆள் எங்கே?"

"ஸ்டேஷன்லதான் இருக்கான்..."

"உடனே கூட்டிட்டு என்னோட அறைக்
வாங்க..."

"எஸ்... ஸார்..."

# 10

அருணகிரி சிகரெட்டைப் பற்ற வைத்து
கொண்டு சிரித்தான்.

"என்ன தரங்கிணி... அப்படிப் பார்க்கிறே
கதவு திறக்கணும்னா உன்னோட உடம்
துணியே இருக்கக்கூடாது... கழட்டிப் போட்டு

தரங்கிணி பதட்டம் பரவின உடம்போ



கதவின் மேல் போய் விழுந்து லாக்கை வேகமாய்
அசைத்தாள்.

அது இம்மிகூட நகரவில்லை.

"நான் பொய்யா சொல்வேன்? உடம்புல
துணியோடு நீ அந்தக் கதவை திறக்கவே
முடியாது."

"யூ... ராஸ்கல்..."

"இந்த ராஸ்கலுக்கு உன்னை மாதிரியான
அழகான பெண்களைப் பிடிக்கும். எத்தினி நாளா
உன்னை வாட்ச் பண்றேன் தெரியுமா?
உன்னோட பலவீனம் என்னாங்கிறதைக்
கண்டுபிடிச்சு... இந்த வீடு வரைக்கும் கூட்டிட்டு வர
ரொம்ப சிரமப்பட்டுட்டேன்... நின்னுட்டு டயத்தை
வேஸ்ட் பண்ண வேண்டாம்... வா கட்டிலுக்கு
போயிடுவோம்..."

சொல்லிக்கொண்டே தோளை இறுகப்
பற்றினான் அருணகிரி. அவள் திமிற முயன்று
முடியாமல் அப்படியே நின்றாள். கண்களில் நீர்.

"ப்ளீஸ்... என்னை விட்டுடு..."

"என்னது? உன்னை விட்டுடறதா...?
விட்டுடறதுக்காகவா இவ்வளவு கஷ்டப்பட்டேன்.
எனக்கு ஒரு மணிநேரம் ஒத்துழைப்புக் குடு...
போயிடலாம்."

"நோ..."

திமிற முயன்றவளை இறுக்கிப் பிடித்தான்.

"சரி... உனக்காக ஒரு சலுகை... சுயநினைவோடு இருக்கும்போது கற்பை பறிகொடுக்கிறதுக்கு கஷ்டமாத்தான் இருக்கும் ஒரு மணிநேரம் மயக்கத்துல இருந்துடேன்..." சொன்னவன் பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து, கர்ச்சீப்பை எடுத்தான். "என்கிட்ட எப்பவும் ரெடிமேடா இருக்கிற மயக்க மருந்து தூவின கர்ச்சீப் இது... மூஞ்சியில் பொத்தின பத்தாவது செகண்ட் மயக்கத்துக்கு போயிடலாம். மயக்கம் ஒரு மணிநேரம்தான்..."

"வே... வேண்டாம்..."

"எனக்கு வேணுமே..." அலட்சியமா சிரித்தவன் கர்ச்சீப்பை அவளுடைய முகத்தில் பொத்துவதற்காக சற்றே நெகிழ்ந்த விநா அவனை உதறினாள்.

எதிர்பாராத அந்த உதறலில் பிடி நழுவ தரங்கிணி அறையின் மூலையை நோக் ஓடினாள். ஒண்டினாள்.

அருணகிரி தோள்களைக் குலுக்கிக்கொண் அவளைப் பார்த்து புன்னகைத்தான். "என் பிரயோஜனம்? இந்த வீட்டுக்குள்ளே எப்



ஓடினாலும் நீ மாட்டிக்குவே..."

"வராதே... என் பக்கத்துல வராதே..."

"இதென்னடா அநியாயமாயிருக்கு... பக்கத்துல வராமே உன்னை எப்படி தொடறதாம்?"

"பக்கத்துல வந்தா... நீ என்னைப் பிணமாத்தான் பார்ப்பே..."

அருணகிரி சிரித்தான். "இந்த சினிமா வசனமெல்லாம் என்கிட்டே எடுபடாது...! நீ நினைச்ச நேரம் உன்னால உயிரைப் போக்கிக்க முடியுமா என்ன?"

"முடியுண்டா... நான் நினைச்சா இந்த நிமிஷமே என்னோட உயிரைப் போக்கிக்க முடியும்..." தன் தலைக்கு இடதுபக்கமாய் - கைக்கு வெகு அருகாமையில் இருந்த - ஸ்விட்ச் போர்டின் ப்ளக் பாயிண்டைக் காட்டினாள் தரங்கிணி.

அருணகிரி பார்த்தான்.

சுண்டுவிரல் உள்ளே நுழையக்கூடிய அளவுக்கு ப்ளக் பாயிண்டில் துவாரங்கள் தெரிந்தன. உள்ளுக்குள் லேசாய் பயம் முளைத்தாலும் காட்டிக் கொள்ளாமல் சிரித்தான்.

"என்னது... நான் உன் பக்கத்துல வந்தா செத்து போயிடுவியா? எங்கே செத்துப் போ பார்க்கலாம்..."

அருணகிரி ஓரடி எடுத்து முன்னால் வைத்தான்.

"வராதே...!"

வந்தான்.

"சொன்னாக் கேளு... நான் செத்துடுவேன்..."

"அதையும்தான் பார்க்கலாமே..."

தரங்கிணி சட்டென்று திரும்பி தன் இடது கையின் சுண்டுவிரலை ப்ளக் பாயிண்ட்டின் துவாரத்திற்குள் நுழைத்தாள்.

"ஏ... ஏ... ஏய்..."

அருணகிரி கத்த -

தரங்கிணியின் உடல் வலிப்பு வந்த மாதிரி வெட்டிக்கொண்டு இரண்டே விநாடிகள் துடித்து சட்டென்று மடங்கியது.

அடங்கியது.



# 11

அந்த இளைஞன் டி.எஸ்.பி. அறைக்குள் நுழைந்து பவ்யமாய் வணக்கம் போட - நவநீதகிருஷ்ணனும், அவினாஷும் அவனை ஏறிட்டார்கள்.

இருபத்தைந்து வயது இருக்கலாம். உருண்டை முகத்தில் பட்டை மீசை வைத்து - கிராப்பை தூக்கி சீவியிருந்தான். டி.எஸ்.பி. கேட்டார்.

"உன் பேரென்ன தம்பி?"

"மோகன் சார்..."

"என்ன வேலை பார்க்கிறே?"

"பெட்ரோல் பங்க்ல காஷியர் சார்..."

"டாக்டர் பிரவீண் கொலையைப் பத்தி என்ன சொல்லப் போறே?"

"சார்... இன்னிக்கு காலையில்தான் பேப்பர் நியூஸ் பார்த்தேன். டாக்டர் ப்ரவீணை கொலை செய்த பெண் எப்படி இருப்பாள்ங்கிற அடையாளங்களை டாக்டரோட ரிசப்ஷனிஸ்ட் விவரிச்சிருந்ததை படிச்சப்ப... எனக்கு என்

பங்குக்கு பெட்ரோல் போட வந்த அந்தப் பெண்ணோட ஞாபகம் வந்துடுச்சு. அவளும் கைனடிக் ஹோண்டாவில்தான் வந்தா..."

போலீஸ் யூனிஃபார்ம்கள் உஷாராயின.

"கைனடிக் ஹோண்டா என்ன கலர்?"

"சில்வர் கிரே ஸார்..! வண்டிக்கு பெட்ரோல் போட்டுட்டு என்கிட்ட பணம் குடுக்க வந்தவ ஸபீட்க்யூர் சைக்யாட்ரிக் சென்டர் - எங்கே இருக்குன்னு கேட்டா... நான்தான் வழி சொல்லியும் விட்டேன்."

நவநீதகிருஷ்ணன் குறுக்கிட்டுக் கேட்டார்:

"அப்ப டயம் என்ன இருக்கும்?"

"ஒரு ஏழு மணி இருக்கும் சார்..."

"வண்டி நம்பரை நோட் பண்ணினியா?"

"பெட்ரோலுக்கு பில் போடும்போது - வண்டி நம்பரையும் பார்த்து குறிச்சேன் சார்..."

"என்ன நம்பர்?"

"டிஎன்சி 8933."

டி.எஸ்.பி., டெலிபோனை நெருங்கி ரிசீவரை எடுத்துக்கொண்டார். டயலில் சில பட்டன்களை தட்டிவிட்டு பேசினார்.



"ஆர்.டி.ஓ..."

"..."

"நான் டி.எஸ்.பி. பேசறேன்."

"..."

"ஒரு என்கொய்ரி அவ்வளவுதான்... டிஎன்சி 8933 ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர்க்குரிய அட்ரஸ் வேணும்..."

"..."

"லைன்லேயே காத்திருக்கேன்..."

"..."

இரண்டு நிமிஷ நேரம் கழித்து ரிசீவர் கரகரத்தது. அட்ரஸை சொல்ல ஆரம்பிக்க, டி.எஸ்.பி. கையில் வைத்திருந்த பேனாவினால் அட்ரஸை எழுத ஆரம்பித்தார்.

ஜே.நிலா,

D/o. ஜெயராமன்,

........................

........................

நவநீதகிருஷ்ணனும், அவிநாஷும் ப்ரூக்பாண்ட் ரோட்டில் இருந்த நிலாவின் வீட்டைக் கண்டுபிடித்து வீட்டுக்கு முன்பாய் போலீஸ்

ஜீப்பை நிறுத்தினார்கள்.

ஒரு சிறிய பங்களா டைப் வீடு. கேட்டை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்கள். முன் வராந்தாவிலேயே ஸ்டாண்ட் இடப்பட்ட சில்வ கிரே நிற கைனடிக் ஹோண்டா தெரிந்தது.

"அவிநாஷ்!"

"சார்..."

"நம்பரை நோட் பண்ணுங்க..."

"பார்த்துட்டேன் சார்... டிஎன்சி 8933"

வாசற்படி ஏறி காலிங் பெல்லைத் தொட்டா அவிநாஷ்.

அடுத்த சில விநாடிகளிலேயே கதவு திறக்கப்ப - நடுத்தர வயதில் ஒரு பெண் நின்றிருந்தா போலீஸ் யூனிஃபார்ம்களைப் பார்த்தது அவளுடைய மை தீட்டிய விழிகளில் லேசா மிரட்சி.

"யார் வேணும்?"

அவினாஷ் புன்னகைத்தார்.

"நிலா..."

"நி... நிலாவா?" பதட்டமடைந்தாள். "ஃப வாட்? எதுக்காக அவளைத் தேடி வந்திருக்கீங்க?"



"காரணத்தை பின்னாடி சொல்றோம். மொதல்ல நாங்க கேட்டதுக்கு பதில். நிலா எங்கே?"

"அவ வீட்ல இல்லை..."

"வீட்ல இல்லைன்னா... வேற எங்கே?"

"பெங்களூருக்குப் போயிருக்கா..."

"எதுக்கு?"

"பேங்க் வேலை. எக்ஸாமை அட்டெண்ட் பண்றதுக்காக..."

"போனது எப்ப...?"

"நேத்திக்கு முந்தின ராத்திரி..."

"நிலாவுக்கு நீங்க என்ன ஆகணும்?"

"அக்கா..."

"வீட்ல வேற யார் இருக்காங்க?"

"இப்ப நான் மட்டும்தான். என்னோட கணவர் ஆபீஸுக்கு போயிருக்கார்."

"அவர் பேரென்ன?"

"நாகராஜன்."

"எங்க வேலை பார்க்கிறார்?"

"ஃபெடரல் பேங்க்ல அக்கௌண்டன்ட்டா இருக்கார்."

"நிலா உங்க கூடப் பிறந்த சிஸ்டரா?"

"ஆமா..."

"அப்பா, அம்மா எங்கே?"

"அவங்க இறந்து பல வருஷமாச்சு."

"அப்படின்னா நிலா உங்க கஸ்டடியில்தான் இருக்கா?"

"ஆமா..."

"டாக்டர் ப்ரவீணை உங்களுக்குத் தெரியுமா?

"தெரியாது...."

"சைக்யாட்ரிஸ்ட் டாக்டர் அவர்...!"

"எனக்குத் தெரியாது."

"அந்தப் பேரைக் கேள்விப்பட்டதுகூ இல்லையா?"

"இல்லை."

"ரெண்டு நாளைக்கு முந்தின ராத்திரி உங் சிஸ்டர் நிலா டாக்டர் பிரவீணைப் பார்க் அவரோட க்ளீனிக்குக்குப் போயிருக்கா. அதுபத்தி ஏதாவது தெரியுமா?"

"தெரியாது..."

நவநீதகிருஷ்ணன் அவளை ஏறிட்டார்.



"உங்க பேரென்னம்மா?"

"துர்கா..."

"இதோ பாருங்க மிஸஸ் துர்கா... நீங்க சாமர்த்தியமா எந்தப் பொய்யைச் சொன்னாலும் நாங்க கண்டுபிடிச்சிடுவோம். உங்களுக்கு டாக்டர் பிரவீணை நிஜமாவே தெரியாதா?"

"தெரியாது."

"அவர் கொலை செய்யப்பட்ட விவரத்தையாவது பேப்பர்ல படிச்சீங்களா?"

"இங்கே பேப்பர் வாங்கறது கிடையாது. யாரோ ஒரு டாக்டர் கொலை செய்யப்பட்டதுக்காக... எங்களை எதுக்காக வந்து விசாரிக்கறீங்க?"

"விசாரிக்க வேண்டிய அவசியம் வந்திருக்கே... ரெண்டு நாளைக்கு முந்தின ராத்திரி உங்க சிஸ்டர் நிலா டாக்டர் பிரவீணைப் பார்க்கப் போய் அவரை துப்பாக்கியாலே சுட்டுக் கொலை பண்ணிட்டு வந்திருக்கா... டாக்டரை முடிச்ச கையோடு, பேங்க் எக்ஸாமை எழுதறதுக்காக - நல்ல பிள்ளை மாதிரி பெங்களூருக்குப் புறப்பட்டு போயிட்டா..."

துர்கா முகம் வியர்த்து உடல் நடுங்கினாள்.

# 12

அருணகிரி எதிர்பார்க்கவேயில்லை
தரங்கிணி அப்படியொரு முடிவை விநாடிக்கு
குறைவான நேரத்தில் எடுத்துக்கொள்வா
என்று.

மின்சாரம் பாய்ந்து விறைத்துப்போ
உடலை... அதிர்ச்சியோடு பார்த்தபடி மண்டியி
உட்கார்ந்தான்.

'நிஜமாவே இறந்து போய்விட்டாளா?' கா
வைத்து இருதயத் துடிப்பைச் சோதித்தான்.

இருதயப் பிரதேசம் பூராவும் பரிபூர
ஹர்த்தால்.

பயமாய் எழுந்தான்.

'இவளை என்ன பண்ணலாம்?'

'இவளுடைய கார் வேறு... வெளி
நிற்கிறதே?'

மெல்ல நடந்து வந்து வெளியே எ
பார்த்தான். இருட்டும் நிசப்தமும் கூட்டணி



ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது.

'என்ன செய்யலாம் இவளை?'

யோசித்தவனின் மூளையில் பளிச்சென்று யோசனை மின்னல் ஒன்று தெரிந்தது. அந்த யோசனையை உடனடியாய் செயல்படுத்தும் வேகத்தோடு வீட்டிற்குள் நுழைந்தான்.

# 13

துர்கா நடுக்கமாய் நவநீதகிருஷ்ணனை
ஏறிட்டாள்.

"டாக்டர் பிரவீணை... நிலா கொலை
பண்ணினாளா? என்ன சார் சொல்றீங்க? அவளை எதுக்காக நிலா கொலை செய்யணும்?"

"அதை நிலா கிட்டதான் கேக்கணும்.... நிலா
பெங்களூர்ல எங்கே தங்கியிருக்கான்னு
தெரியுமா?"

"அவளோட ஃப்ரெண்ட் வீட்ல தங்கப் போறதா
சொன்னா?"

"அந்தப் பொண்ணோட பேர்... அட்ர ஸ்
என்ன?"

"பெங்களூருக்கு புறப்பட்டுப் போகும்போது அந்தப் பொண்ணோட பேரையும், அட்ரசையும் ஒரு காகிதத்துல குறிச்சுக் குடுத்துட்டுப் போனா... ஆனா அந்தப் பேப்பரை எப்படியோ மிஸ் பண்ணிட்டேன்..."

"நீங்க சொல்றது எதுவுமே நம்ப முடியலையே... இந்த வீட்ல நிலாவோட ரூம் எது?" கேட்டுக்கொண்டே நவநீதகிருஷ்ணன் உள்ளே நுழைய அவிநாஷ் பின்தொடர்ந்தார்.

துர்கா கண்களில் நீரோடு அவர்களை ஏறிட்டாள்.

"ஸார்! ஒரு நிமிஷம்..."

"என்ன?"

"பேங்க்ல இருக்கிற என்னோட கணவருக்கு போன் பண்ணி அவரை வீட்டுக்கு வர சொல்லணும்."

"இந்த வீட்ல போன் இருக்கா...?"

"இல்ல ஸார்...! எதிர்வீட்ல இருக்கு... நா போய் பேசிட்டு வந்துடறேன்."

"நிலாவோட ரூம் எதுன்னு காட்டிட்டு நீங் போன் பண்ணப் போகலாம்."

"அதோ அந்த ரூம்தான்..."



எதிரே இருந்த ரூமை கை காட்டிவிட்டு, வேகவேகமாய் வெளியேறினாள் துர்கா. நவநீதகிருஷ்ணனும், அவிநாஷும் நிலாவின் அறைக்குள் நுழைந்தார்கள்.

சிறிய அறைதான்.

லாக் செய்யப்படாமல் இருந்த பீரோவைத் திறந்து - பார்வைக்கு பட்டவற்றை கிளற ஆரம்பித்தார்கள். சேலைகள், உள்ளாடைகள், ஜுவல்ஸ் பாக்ஸ், இன்சூரன்ஸ் பாலிசி சம்பந்தப்பட்ட ஃபைல், போட்டோ ஆல்பம்.

துர்கா திரும்பி வந்தாள்.

"போன் பண்ணிட்டேன். அவர் வந்துட்டிருக்கார்..." மூச்சிரைத்தபடி சொல்லிவிட்டு, நவநீதகிருஷ்ணனிடம் குரல் தழுதழுத்தாள்.

"சார்... என்னோட சிஸ்டர் தைரியமானவதான். ஆனா... கொலை பண்ற அளவுக்கு அவளுக்குத் துணிச்சல் கிடையாது."

"இதோ பாருங்க மிஸஸ் துர்கா...! உங்க சிஸ்டர் நிலா டாக்டர் பிரவீண் இருந்த அறைக்குள்ளே நுழைஞ்சு அவரை தீர்த்துக் கட்டிட்டு வெளியே வந்ததை க்ளீனிக்ல இருந்த அத்தனை பேரும் பார்த்திருக்காங்க. நிலா

வெளியே போன பிறகு – மத்த எந்த பேஷண்ட்டும் உள்ளே போகலை..."

"சார்... அந்த க்ளீனிக்ல என்னமோ தப்பு நடந்திருக்கு..."

"தப்பு வேற எதுவுமே இல்லை... நிலா பண்ணின தப்புதான்..."

துர்கா இடிந்து போய் அங்கிருந்த நாற்காலியில் சாய்ந்தாள்.

அடுத்த பத்து நிமிஷத்திற்குள் –

வீட்டு வாசலில் ஸ்கூட்டர் உறுமும் சத்தம் கேட்டது. துர்காவின் கணவன் நாகராஜன் வேகவேகமாய் உள்ளே வந்தான்.

அவனைப் பார்த்ததுமே துர்காவுக்கு அழுகை பொங்கியது.

நாகராஜன் அவிநாஷை பார்த்து பொரிந்தான்.

"ஸார்... வாட் ஈஸ் திஸ்...? யாரோ எதையோ சொன்னாங்கங்கிறதுக்காக அதை அப்படியே நம்பிட்டு வந்து..." அவிநாஷ் கையமர்த்தினார்.

"டோண்ட் பி எமோஷனல்! யாரோ எதையோ சொல்லி நாங்க இங்கே வரலை... தகுந்த ஆதாரங்களை திரட்டிகிட்டுத்தான் வந்திருக்கோம்..."



"என்ன ஆதாரம்?"

அவிநாஷ் மறுபடியும் எல்லாவற்றையும் ஒரு தடவை சொன்னார்.

"கைனடிக் ஹோண்டாவில் டாக்டர் வீட்டுக்குப் போனது நிலாதான்னு சொல்ல வர்றீங்களா?"

"ஆமா..."

"அவ ஏன் வேற பொண்ணாயிருக்கக் கூடாது?"

"யூ... மீன்...?"

"சார்... இந்த சிட்டியில் எவ்வளவோ சில்வர் கிரே நிற கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர்ஸ் ஓடுது. அதுல ஒரு ஸ்கூட்டரை எந்தப் பொண்ணாவது உபயோகப்படுத்தி – டாக்டரோட க்ளீனிக்குப் போய் – நான்தான் நிலான்னு சொல்லிகிட்டு உள்ளே போய் டாக்டரை தீர்த்துக் கட்டியிருக்கலாமே..."

"ஸ்கூட்டரோட ரெஜிஸ்ட்ரேஷன் நெம்பர்...?"

"போகஸ் நெம்பர் பிளேட்டை மாத்தறதுக்கு எவ்வளவு நேரம் ஸார் ஆகும்?"

"அப்படீன்னா... நிலாவுக்கு வேண்டாத பொண்ணு யாராவது இந்தக் காரியத்தை பண்ணியிருக்கலாம்னுதான் நினைக்கறீங்களா?"

"சர்ட்டன்லி..."

அவிநாஷும், நவநீதகிருஷ்ணனும் திடும்மென்று ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"அப்படியும் இருக்குமோ?"

"அவிநாஷ்...!"

"சார்..."

"நீங்க ஒரு காரியம் பண்ணனும்..."

"சொல்லுங்க ஸார்..."

"ஜீப்பை எடுத்துக்கிட்டுப் போய் டாக்டர் பிரவீண் க்ளீனிக்கில் வேலை பார்த்த ரிசப்ஷனிஸ்ட் சுகன்யாவையும் அந்த பெட்ரோல் பங்க் கேஷியர் மோகனையும் உடனே இங்கே கூட்டிட்டு வாங்க..."

"எஸ்... ஸார்..."

ஏறக்குறைய ஒரு மணிநேரம் கழித்து இருவரோடும் அவிநாஷ் உள்ளே வந்தார்.

நவநீதகிருஷ்ணன் பீரோவில் இருந்த அந்த போட்டோ ஆல்பத்தை எடுத்தார். முதல் பக்கத்தைப் பார்த்து, நாகராஜனுக்கும் துர்காவுக்கும் நடுவில் நின்ற பெண்ணை துர்காவுக்குக் காட்டினார்.



"இது உங்க சிஸ்டர் நிலாதானே...?"

"ஆமா..."

நவநீதகிருஷ்ணன் தனக்கு எதிரில் நின்றிருந்த சுகன்யாவையும், மோகனையும் ஏறிட்டார்.

"மோகன்! நீங்க சொல்லுங்க... அன்னிக்கு பெட்ரோல் பங்க்குக்கு டாக்டர் ப்ரவீணோட அட்ரஸைக் கேட்டது இந்தப் பெண்தானே?"

"ஆமா ஸார்..."

சுகன்யாவிடம் திரும்பினார். "அன்னிக்கு க்ளீனிக்குக்கு வந்து ஒரு பர்சனல் விஷயமா டாக்டரைப் பார்த்து பேசணும்னு சொல்லி உள்ளே போனது இந்தப் பெண்தானே?"

சுகன்யாவும் பார்த்துவிட்டு தலையசைத்தாள்.

"இவளேதான்...!"

நவநீதகிருஷ்ணன் நாகராஜனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"இப்ப என்ன சொல்றீங்க?"

# 14

அருணகிரி தரங்கிணியின் உடலை சிரமமாய் தூக்கி வந்து – காரின் பின்சீட்டில் கிடத்திவிட்டு – ட்ரைவிங் சீட்டுக்கு வந்து – காரைக் கிளப்பினான்.

போக்குவரத்தற்ற நெடுஞ்சாலை சுத்தமாய் வெறிச்சிட்டு தெரிய – ஆக்சிலேட்டரை மிதித்தான்.

பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட இரண்டு கிராமங்கள் வெளிச்சமாய் கடந்து போனதும் காரின் வேகத்தைக் குறைத்து அந்தப் பொட்டல் பிரதேசத்தை சமீபித்து நிறுத்தினான்.

காரின் முகப்பு விளக்குகளை அணைத்துவிட்டு, கீழே இறங்கினான்; சுற்றும் முற்றும் பார்த்தான்.

இருட்டு.

திருகுப்பூச்சிகளின் உச் கொட்டும் சத்தம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

ரோட்டின் இடது பக்க சரிவில் – அந்த மின்சார போர்டின் ட்ரான்ஸ்ஃபார்மர் திம்மென்று நின்றிருக்க – அருணகிரி சுற்றும் முற்றும் மறுபடியும் பார்த்துக் கொண்டு காருக்கு வந்தான். பின்பக்கக் கதவைத் திறந்து உள்ளே கிடத்தப்பட்டிருந்த தரங்கிணியை அள்ளிக்கொண்டு ட்ரைவிங் சீட்டுக்கு வந்தான். ஸ்டீயரிங்கிற்கு எதிரே உட்கார வைத்து, கதவை மூடி லாக் செய்தான்.

பின், காரின் பின்பக்கமாய் வந்து நின்று, அதன் முதுகில் கையை வைத்து தம் கொடுத்து தள்ளினான்.

கார் மெல்ல மெல்ல நகர்ந்தது.

ட்ரான்ஸ்ஃபார்மரைக் குறிவைத்து, அருணகிரி காரைத் தள்ள, அது பிசகாமல் நகர்ந்து சரிவில் இறங்கியது.

தட... தட... தட...

கார் பார்த்தீனிய செடிகளைத் துவம்சம் செய்தபடி வேகமாய் இறங்கி –

கீழே நின்றிருந்த –

ட்ரான்ஸ்ஃபார்மரின் மேல் –

க்ரட்டீர் என்று மோதி நின்றது.

ட்ரான்ஸ்ஃபார்மரின் இருதயப் பகுதியில் தீப்பொறிகள் சடச்சடவெனக் கிளம்ப –அருணகிரி விலகி – வந்த வழியே ஓட்டமும் நடையுமாய் விரைய ஆரம்பித்தான்.

# 15

"இப்ப என்ன சொல்றீங்க...?"

நவநீதகிருஷ்ணன் இப்படிக் கேட்டதும் - நாகராஜன் வியர்த்த முகமாய் நின்றார்.

"ஸ...ஸார்... இ...இது எப்படின்னே...?"

"உங்களுக்குப் புரியலை அதானே...? நான் சொல்றேன். நிலாவுக்கும் டாக்டர் ப்ரவீனுக்கும் மத்தியில் ஏதோ சம் 'க்ளிக்' இருந்திருக்கு. அந்த 'க்ளிக்' கொலை செய்யற அளவு வரைக்கும் போயிருக்கு... அதுபத்தின எல்லா விவரமும் நமக்குத் தெரியணும்னா... பெங்களூர்ல இருக்கும் நிலா உடனடியா இங்கே வந்தாகணும்."

நாகராஜன் கம்மிய குரலில் சொன்னான். "இன்னிக்கு ஒருநாள்தான் எக்ஸாம்... நாளைக்கு காலையில இங்கே இருப்பா..."

"ஆர்... யூ... ஷ்யூர்?"

"ஷ்யூர்..."

"பெங்களூர்ல நிலா எங்கே தங்கியிருக்காள்னு தெரியுமா?"



"ஒரு ஃப்ரண்டோட அட்ரஸைக் குடுத்துட்டுப் போனா. ஆனா அந்த அட்ரஸை என்னோட மனைவி எங்கேயோ மிஸ் பண்ணிட்டா..."

"நிலாவுக்கு காதல் விவகாரம் ஏதாவது உண்டா...?"

"எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் இல்லை..."

"மிஸஸ் துர்கா... உங்களுக்கு ஏதாவது விவரம் தெரியுமா?"

"தெரியாது..."

"பெங்களூர்ல எந்த பேங்குக்கான எக்ஸாம் அது?"

"வைஸ்யா பேங்க்..."

"பேங்க்கோட அட்ரஸ் சொல்ல முடியுமா?"

"எஸ்... நம்பர் 411, கெம்பே கௌடா ஸர்க்கிள்...."

"போன் நெம்பர்...?"

"தெரியலை..."

"அவிநாஷ்...!"

அவிநாஷ் சிரித்தார்.

"ஸார்..."

"எதிர்வீட்டு போன்ல லைட்னிங் கால் மூலமா அந்த வைஸ்யா பேங்க்கை காண்டாக்ட் பண்ணி நிலாங்கிற கேண்டிடேட்டைப் பத்தி ஏதாவது விவரம் தெரியுமான்னு கேளுங்க..."

தலையாட்டிவிட்டு எதிர்வீட்டுக்கு விரைந்தார் அவிநாஷ். வீட்டுக்கார ஆடிட்டரிடம் பர்மிஷன் வாங்கிக் கொண்டு டெலிபோனில் கூப்பிட்டார். "திஸ் ஈஸ் போலீஸ்... நாட் நோன் டெலிபோன் நெம்பர் ஆஃப் வைஸ்யா பேங்க்... ப்ளீஸ் ஃபைண்ட் த நெம்பர்... அண்ட் மேக் லைட்னிங் கால்..."

"எனி... பி... பி...?"

"நோ நெம்பர் கால்..."

ரிசீவரை வைத்துவிட்டுக் காத்திருந்தார் அவிநாஷ்.

அடுத்த ஒரு நிமிஷத்திற்குள்ளாகவே லைட்னிங்காலில் பெங்களூர் வைஸ்யா பேங்க் மானேஜர் லைனில் கிடைத்தார்.

"எஸ்... திஸ் ஈஸ் வைஸ்யா பேங்க்..."

அவிநாஷ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு பேசினார். "உங்களிடமிருந்து நாங்கள் எதிர்பார்க்கும் உதவி இதுதான்... கோயம்புத்தூரிலிருந்து நிலா என்கிற பெண்



உங்கள் பேங்க் வேலைக்காக எக்ஸாம் எழுத வந்திருக்கிறாள். அவளைப் பற்றிய விவரங்கள் வேண்டும்..."

"பெயர் என்ன சொன்னீர்கள்?"

"நிலா..."

"உங்கள் டெலிபோன் எண்ணைக் கொடுங்கள். பத்து நிமிடம் கழித்து நானே போய் செய்கிறேன்."

பதினைந்து நிமிஷத்திற்குப் பிறகு - டெலிபோன் கூப்பிட்டது. முன்பு பேசிய அதே குரல் கேட்டது.

"நீங்கள் குறிப்பிட்ட பெண்ணின் பெயர் நிலாதானே?"

"ஆமாம்."

"பாங்க் பரீட்சை எழுத வேண்டியவர்களின் பட்டியலில் அந்தப் பெயர் இருக்கிறது. ஆனால்..."

"ஆனால்..."

"அந்தப் பெண் பரீட்சை எழுதவே வரவில்லை..."

"என்னது...?"

"எஸ்... இன்னிக்கு பரீட்சையோட மூன்றாவது

பேப்பர். இதற்கும் வரவில்லை. இதற்கு முன்பு நடந்த ஆங்கிலம், கணக்கு இரண்டு பரீட்சைகளுக்கும் வரவில்லை... இதை நன்றாய் உறுதிப்படுத்திக் கொண்டுதான் சொல்கிறோம்..."

## 16

செய்தித்தாள் டீபாயின் மேல் விரிந்து கிடக்க - அதில் வந்த செய்தியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் சங்கரன்.

ட்ரான்ஸ்ஃபார்மரின் மேல் கார் மோதி ஓட்டி வந்த பெண் மரணம் - இதுபற்றி கூறப்படுவதாவது: தரங்கிணி (வயது 23) மைசூரைச் சேர்ந்த சங்கரன் என்பவரது மகள். பட்டதாரி. இவர் சம்பவத்தன்று காரில் கல்பனா அவென்யூவைத் தாண்டி , உள்ள கல்வீரம்பாளையம் ரோட்டில் போய்க் கொண்டிருந்தபோது - கார் நிலை தடுமாறி - ரோட்டை விட்டு இறங்கி பள்ளத்தில் நின்றிருந்த மின்சார ட்ரான்ஸ்ஃபார்மரின் மேல் பாய்ந்துவிட்டது. கார் ட்ரான்ஸ்ஃபார்மரின் மேல் மோதியதால் மின்சாரத்தால் தாக்கப்பட்ட தரங்கிணி அதே இடத்தில் உடல் கருகி செத்தாள்.



இது சம்பந்தமாய் கல்வீரம்பாளையம் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த...

பூட்ஸ் சத்தம் கேட்டு நிமிர்ந்தார் சங்கரன்.

இன்ஸ்பெக்டர் விக்டர் நின்றிருந்தார்.

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்..."

சங்கரன் கண்களில் நீரோடு சோபாவைக் காட்ட விக்டர் உட்கார்ந்துகொண்டே கேட்டார்.

"தரங்கிணி இறந்தது விபத்தில்லை. அவ கொலை செய்யப்பட்டிருக்கான்னு ஸ்டேஷன்ல கம்ப்ளைண்ட் குடுத்திருக்கீங்க போலிருக்கு..."

"ஆமா..."

"உங்க கம்ப்ளைண்ட்ல நியாயம் இல்லை ஸார்..."

"நியாயமில்லையா...?"

"எஸ்... உங்க மகளோட போஸ்ட் மார்ட்டம் ிப்போர்ட் க்ளியரா சொல்லுது... ரான்ஸ்ஃபார்மர் மேல மோதி உடம்புல ின்சாரம் பாய்ஞ்சுதான் அவங்க செத்திருக்காங்க... உடம்புல வேற எந்தக் ாயமும் இல்லை..."

"ஸாரி... உங்க போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை ான் நம்பத் தயாராயில்லை... தரங்கிணி

கொலைதான் செய்யப்பட்டிருக்கா..."

"எப்படி சொல்றீங்க?"

"முதல் காரணம்... அவ என்னிக்குமே ரேஷ் டிரைவிங் கிடையாது. காரை நிதானமாத்தான் ஓட்டிக்கிட்டுப் போவா. ரெண்டாவதா... அவ சிட்டி லிமிட்டைத் தாண்டப் போறதா இருந்தா என்கிட்ட பர்மிஷன் கேட்பா... மூணாவதா தரங்கிணி கல்வீரம்பாளையத்துக்குப் போக வேண்டிய அவசியமே இல்லை..." சங்கரன் சொல்ல - விக்டர் புன்னகைத்தார்.

"இந்தக் காரணங்கள் எல்லாம் ஒத்துக்கிற மாதிரி இல்லையே? ரேஷ் ட்ரைவிங்ல போனாத்தான் கார் ஆக்ஸிடெண்ட் ஆகணும்ங்கிறது இல்லையே... மெதுவா போற கார்கூட ஆக்ஸிடெண்ட்டுக்கு உட்படலாம்... நீங்க சொன்ன இரண்டாவது மூணாவது காரணங்களும்கூட சரியில்லை. தரங்கிணி உங்களுக்குத் தெரியாமே யாரையாவது சந்திச்சுப் பேச கல்வீரம்பாளையத்துக்குப் போயிருக்கலாமில்லையா...?"

"எனக்கு அப்படித் தோணலை இன்ஸ்பெக்டர்..."

"சரி... நீங்க யாரை சந்தேகப்படறீங்க?"



"என்னால யாரை சொல்ல முடியும்...? ஐ காண்ட் ஸே!"

"மிஸ்டர் சங்கரன்.... யோசிச்சுப் பாருங்க... உங்க டாட்டர் கொலை செய்யப்பட்டிருக்கணும்ங்கிற பட்சத்தில்... நீங்க யாரையாவது சந்தேகப்பட்டுத்தான் ஆகணும்... உங்க டாட்டர்க்கு காதல் விவகாரம் ஏதாவது...?"

"அப்படி எதுவும் இல்லை..."

"டேக் யுவர் ஓன் டைம்... நல்லா யோசனை பண்ணிப் பாருங்க... உங்க மனசுக்கு யாராவது சந்தேகமாப்பட்டா... எனக்கு போன் பண்ணி சொல்லுங்க..."

சொல்லிவிட்டு, இன்ஸ்பெக்டர் விக்டர் எழுந்து கொண்டார்.

# 17

அவிநாஷ் சொன்னதைக் கேட்டு நாகராஜனும் துர்காவும் கண்கள் விரிய திடுக்கிட்டார்கள்.

"என்னது...! நிலா பேங்க் எக்ஸாம் எழுதவே போகலையா?"

"எஸ்..."

"நோ இன்ஸ்பெக்டர்... அவ பேங்க் எக்ஸாம் எழுதத்தான் போயிருக்கா... பேங்க் அதாரிடீஸ் சரியா பார்த்து சொல்லியிருக்க மாட்டாங்க..."

"இது கன்ஃபார்ம்ட் நியூஸ்... பேங்க் மானேஜர்கிட்டே ரெண்டு மூணு தடவை கேட்டு கன்ஃபார்ம் பண்ணிக்கிட்டேன்.... நிலா சரியானபடி திட்டம் போட்டுத்தான் இந்தக் கொலைக் காரியத்தில் இறங்கியிருக்கா... பை... த... பை... நிலாவுக்கு நெருக்கமான ஸ்நேகிதி யாரு?"

"லாவண்யான்னு ஒரு பொண்ணு..."

"அந்தப் பொண்ணோட அட்ரஸ்?"

"சுக்ரவாரப்பேட்டையில் போஸ்ட் ஆபீசுக்கு இடது பக்கம் இருக்கிற வீடு... அவளோட அப்பா ஒரு லாயர். பேரு புகழேந்தி..."

நவநீதகிருஷ்ணனும் அவிநாஷும் அந்த நிமிஷமே புறப்பட்டார்கள். பத்து நிமிசத்தில் சுக்ரவாரப்பேட்டை வந்தது. தபால் நிலையத்தின் பெயர்ப் பலகை பார்வைக்கு கிடைத்தது. அதற்குப் பக்கத்தில் இருந்த வீட்டுக்கு முன்பாய் ஜீப்பை நிறுத்தினார்கள்.

"இந்த வீடுதான் ஸார்... வழக்கறிஞர்



புகழேந்தி போர்டு காம்பௌண்ட் கேட்ல தெரியுது..."

ஜீப்பினின்று கீழே இறங்கவே -

வெளியே புறப்பட்டுப் போக - கதவைத் திறந்தபடி எதிர்ப்பட்ட அந்தப் பெண் நின்றாள். போலீசைப் பார்த்ததும் திகைத்தாள்.

"யார் வேணும்?"

"இங்கே லாவண்யாங்கிறது...?"

"நான்தான்..."

"வீட்ல வேற யார் இருக்காங்க?"

"அப்பா கோர்ட்டுக்குப் போயிருக்கார். அம்மா பக்கத்து வீட்டுக்குப் போயிருக்காங்க. ஏன் சார்... என்ன விஷயம்?"

"ஏம்மா உனக்கு நிலாங்கிற பொண்ணைத் தெரியுமா?"

"தெரியுமே... ஷி ஈஸ் மை ஃப்ரண்ட்...."

"நிலா இப்ப எங்கே போயிருக்கான்னு தெரியுமா?"

"பெங்களூருக்கு பாங்க் எக்ஸாம் எழுதறதுக்குப் போயிருக்கா" என்றவள் கலவரமாய் கேட்டாள்: "எதுக்காக சார் நிலாவைப் பத்தி கேக்கறீங்க? வாட் ஈஸ் ராங் வித் ஹர்..."

"விவரம் என்னாங்கிறதை கடைசியா சொல்றோம்மா...! மொதல்ல நாங்க கேட்கிற கேள்விகளுக்கு நீ உண்மையான பதில்களைச் சொல்லணும்..."

"கே... கேளுங்க சார்..."

"டாக்டர் பிரவீணைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கியா?"

லாவண்யா முகம் இருண்டு போய் மௌனம் சாதித்தாள். நவநீதகிருஷ்ணன் தொடர்ந்து கேட்டார்: "போலீஸ்கிட்ட எந்த விசயத்தையும் மறைக்கக்கூடாது. சொல்லம்மா... டாக்டர் பிரவீணை உனக்குத் தெரியுமா?"

"தெரியும்..."

"எப்படித் தெரியும்?"

"ஸார்... நான் இப்ப சொல்லப் போற விஷயத்தை எங்க ஃபாதர் மதர்கிட்ட சொல்லிடாதீங்க சார்... பத்து நாளைக்கு முன்னாடி ஒரு கன்சல்டேஷனுக்காக அந்த டாக்டர்கிட்ட போயிருந்தேன். தினசரி ராத்திரி வேளைகள்ல எனக்கு சரியானபடி தூக்கம் கிடையாது. இதுக்கான காரணத்தை தெரிஞ்சுக்கிறதுக்காக டாக்டர் பிரவீண்கிட்ட போனேன். டாக்டர் என்னைப் பார்த்த பார்வை



சரியில்லை. டெஸ்ட் பண்ணுவதாய் சொல்லிக்கொண்டு என் உடம்பை வரம்பு மீறி தொட்டார். நான் பயந்து போய் வெளியே வந்துட்டேன். இந்தச் சம்பவத்தை ரெண்டு நாளைக்கு முந்தி நிலாகிட்ட சொன்னேன். நிலா இயற்கையிலேயே தைரியசாலி. கண் முன்னாடி எந்த அநியாயம் நடந்தாலும் சரி... உடனே தட்டிக் கேட்கிற ரகம் அவ... அவகிட்ட டாக்டர் பிரவீணைப் பத்தி சொன்னதும் அவ கொதிச்சுப் போயிட்டா... அந்த டாக்டரை சந்திச்சு நறுக்-ன்னு நாலு வார்த்தை கேட்டுட்டு வர்றேன்னு துடிச்சா... நான்தான் வேண்டாம்னு சொல்லி கன்வின்ஸ் பண்ணினேன்..."

"நீ கன்வின்ஸ் பண்ணியும் அவ போயிருக்கா... தெரியுமா?"

"ஈஸிட்...?"

"போனது மட்டுமில்லை... டாக்டரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை பண்ணிட்டு அதே கையோடு பெங்களூருக்குப் போறேன்னு கிளம்பிட்டா..."

"எ... என்ன சார் சொ... சொல்றீங்க? நிலா டாக்டரைக் கொன்னுட்டாளா?"

"எஸ்... உனக்குப் பேப்பர் படிக்கிற வழக்கமே

இல்லையா? ரெண்டு நாளா எந்தப் பேப்பரை எடுத்தாலும் இதே நியூஸ்தானே...?"

"பேப்பர் போடற பையன் ஒரு வாரம் லீவு சார்..."

"சரி! நிலாவோட திருவிளையாடலுக்கு மறுபடியும் வருவோம். பாங்க் பரீட்சை எழுதப் போறதாய் சொல்லிட்டு... வீட்டை விட்டுக் கிளம்பின நிலா பெங்களூருக்கும் போகலை..."

"பி... பின்னே...?"

"யாருக்கு தெரியும்? பேப்பர்ல நியூஸை படிச்சிட்டு தலைமறைவாயிட்டாங்கிறது எங்க அஸ்ஸெம்ஷன்..."

"நோ சார்... நிலா அந்தக் கொலையைப் பண்ணியிருக்க மாட்டா... ஷி மே பி எமோஷனல்... பட் நாட் க்ரிமினல்..."

"அவ க்ரிமினல் இல்லாத பட்சத்தில் ஏன் தலைமறைவாய் இருக்கணும். வீ ஆர் ஷ்யூர் அபௌட் இட்...! டாக்டர் பிரவீணை நிலா கொலை பண்றதுக்காக என்ன மோட்டீவ் இருக்க முடியும்னு நாங்க யோசிச்சு யோசிச்சு குழம்பிட்டிருந்தோம். உன்கூட பேசின பின்னாடிதான் மோட்டீவ் பொருந்தி வருது. உன்கிட்ட தப்பா நடக்க முயற்சி பண்ணின



டாக்டரைக் கண்டிக்கப் போன நிலா - பேச்சு வார்த்தை முற்றி, கொண்டு போன ரிவால்வரால் அவரை சுட்டுக் கொன்னிருக்கா..."

லாவண்யாவுக்கு முதல்முறையாய் அந்த சந்தேகம் வந்தது. 'அப்படியும் இருக்குமோ...?'

## 18

மைசூர் சூப்ரிண்டெண்ட் ஆஃப் போலீஸ் - சங்கரனுக்கு முன்பாய் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து மெதுவான குரலில் சொல்லிக் கொண்டிருந்தார்.

"மிஸ்டர் சங்கரன்! உங்க டாட்டர் தரங்கிணியோடு பழகின எல்லோரையும் விசாரிச்சுப் பார்த்துட்டோம். க்ளூ எதுவுமே கிடைக்கலை. யாரையும் எந்தக் காரணத்துக்காகவும் சந்தேகப்பட முடியலை... நீங்க நினைக்கிற மாதிரி தரங்கிணி கொலை செய்யப்படலை... இது ஒரு ப்யூர்லி ஆக்சிடெண்ட்தான்..."

"உங்களால மர்டரைக் கண்டுபிடிக்க முடியலைன்னு சொல்லுங்க... எஸ்.பி. ஸார்...

நீங்க நினைக்கிற மாதிரி இது ஆக்சிடெண்ட் இல்லை. பெர்ஃபெக்ட் மர்டர்..."

"சாரி... யுவர் கன்க்ளூஷன் ஈஸ் ராங்... போலீஸ் உங்க டாட்டர் மரணம் சம்பந்தமான.. எல்லா விசாரணைகளையும் முடிச்சு ஃபைலை க்ளோஸ் பண்ணியாச்சு... இனிமே புதுசாய் கிளற எதுவுமேயில்லை..."

எஸ்.பி. எழுந்தார்.

"நான் மறுபடியும் உங்களை சந்திக்கும்போது... நீங்களும் நான் இப்ப சொன்ன முடிவுக்குத்தான் வந்திருப்பீங்க... நான் வர்றேன்..."

# 19

டெலிபோன் கூப்பிட்டதும் - பிக்பாக்கெட் பேர்வழி ஒருவனை விசாரித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் ரிசீவரை எடுத்தார்.

"எஸ்... திஸ் ஈஸ் பி - 2 போலீஸ் ஸ்டேஷன்..."

"இன்ஸ்பெக்டர் இருக்காரா?"

ஒரு ஆண் குரல் கேட்டது.



"எஸ்... ஹோல்டிங்..."

"இன்ஸ்பெக்டர்! நான் ஒரு டாக்டர் பேசறேன். என்னோட பேர் அட்ரஸையெல்லாம் கேட்டுக் கட்டாயப்படுத்தலைன்னா உங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்ல விரும்பறேன்..."

"என்ன விசயம்?"

"பிரவீண் கொலையில கொலையாளியைப் பிடிச்சுட்டீங்களா?"

"இன்னும் இல்லை..."

"கொலையாளியைக் கண்டுபிடிக்கிறதுக்கு முந்தி - கொலைக்கான மோட்டீவ் என்னவாயிருக்கும்கிறதை கண்டுபிடிச்சுட்டா... உங்க வேலை சுலபமா முடியும்னு நினைக்கிறேன்..."

"மோட்டீவா? என்ன மோட்டீவ்?"

"இன்ஸ்பெக்டர்... பிரவீணைப் பத்தி நான் இப்ப சொல்லப் போகிற விசயம் உங்களுக்கு ஆச்சர்யத்தைத் தரலாம்..."

"என்ன சொல்லப் போறீங்க?"

"பிரவீண் ஒரு டாக்டரே இல்லை. ஹி ஈஸ் ஏ போகஸ்."

"வாட் டு யூ மீன்...?"

"எஸ்... இன்ஸ்பெக்டர்...! பிரவீண் ஒரு போலி டாக்டர். அவன் பி.ஏ. சைக்காலஜி மட்டும்தான் படிச்சிருக்கான்... அவனுடைய ப்ராக்டீஷனர் சர்டிபிகேட்டெல்லாம் போலி. ஆறு மாசத்துக்கு முந்தியே... எனக்கு இந்த உண்மை தெரியும்."

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"மைசூர்ல டாக்டர் எல்லன்-னு ஒருத்தர் இருந்தார். அவர் ஒரு சைக்யாட்ரிஸ்ட். அவர்கிட்ட இந்த பிரவீண் ஒரு கம்பௌண்டர் மாதிரி ஒர்க் பண்ணிட்டிருந்தான். டாக்டர் இறந்ததும், கோயமுத்தூர் வந்து போலி சான்றிதழ்களை ப்ரிப்பேர் பண்ணிகிட்டு ஒரு டாக்டரா மாறிட்டான். இவன் டாக்டர் எல்லன்கிட்ட கம்பௌண்டரா இருந்தப்ப ஒரு தடவை பார்த்திருக்கேன். ஆறு மாசத்துக்கு முந்தி - அவனை ஒரு க்ளப் மீட்டிங்ல பார்த்ததும் எனக்கு அதிர்ச்சி." என்னோட அதிர்ச்சியைக் கண்டுபிடிச்சுட்ட அவனும் - உடனே என்னை சந்திச்சு தனியா கூட்டிப் போய் கால்ல விழுந்துட்டான். போலீஸுக்குக் காட்டிக் குடுத்துட்டா வாழ்க்கையே நாசமாயிடும்னு கண்ணுல தண்ணியைக் காட்டினான். எனக்கு மனசு இளகிடுச்சு... நானாக இந்த விசயத்தைப் போலீசுக்குக் கொண்டு போகமாட்டேன்னு சொன்னேன். இப்ப ஆளே உயிரோடு



இல்லாததினால... இந்த உண்மையை உங்களுக்கு சொல்றேன்... பிரவீண் ஒரு போலி டாக்டர் என்கிற விஷயம்... கொலையாளியைக் கண்டுபிடிக்க உதவும்னு நினைக்கிறேன்..."

"டொக்!"

ரிசீவர் வைக்கப்பட்டது.

"ஹலோ... ஹலோ..." டெலிபோனின் பட்டனைத் தட்டி கத்திய நவநீதகிருஷ்ணன் மறுமுனை மௌனம் சாதிக்கவே ரிசீவரை வைத்துவிட்டு - இடது கையின் ஆட்காட்டி விரலால் நெற்றியை அழுத்தமாய் தேய்த்துவிட்டுக் கொண்டார்.

'இதென்ன புதுக் குழப்பம்?'

'பிரவீண் போலி டாக்டரா?'

'நம்ப முடியவில்லையே!'

"அவிநாஷ்"

குரல் கொடுத்தார்.

"ஸார்...!"

"டாக்டர் பிரவீணைப் பத்தி ஒரு புதுத் தகவல் கிடைச்சிருக்கு. ஹி ஈஸ் ஏ போகஸ். மைசூரில்... ஒரு டாக்டர்கிட்ட..."

டெலிபோன் மறுபடியும் கதறியது.

நவநீதகிருஷ்ணன் பேச்சைப் பாதியில் விட்டுவிட்டு ரிசீவரை எடுத்தார். "எஸ்..."

ஒரு ஆண் குரல் பலகீனமாய் பேசியது.

"ஐ வாண்ட் டு ஸ்பீக் வித் மிஸ்டர் நவநீதகிருஷ்ணன்..."

"ஸ்பீக்கிங்..."

"நீங்க உடனே ஹோட்டல் ப்ரியாவுக்கு புறப்பட்டு வரமுடியுமா?"

"நீங்க யாரு?"

"வந்தா தெரியும்..."

"ஃபார் வாட்?"

"அதுவும் வந்தா தெரியும்..."

"ஆர்.எஸ்.புரத்தில் இருக்கிற ப்ரியா ஹோட்டல்தானே?"

"அதுவேதான்... ரூம் நெம்பர் 104ல் தங்கியிருக்கேன். உடனே புறப்பட்டு வர்றீங்களா?"

"இப்பவே வர்றேன்."

ரிசீவரை வைத்த நவநீதகிருஷ்ணன் - அவிநாஷிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.



# 20

ஹோட்டல் ப்ரியா ஆர்.எஸ்.புரத்தின் மையத்தில் நான்கு மாடிகளோடு - திம்மென்று டோல்பூர் ஸ்டோன்களோடு திம்மென்று நின்றிருக்க - நவநீதகிருஷ்ணன் பைக்கை டு வீலர்ஸ் பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு ரிசப்ஷனுக்குள் நுழைந்தார்.

"ரூம் நெம்பர் 104ல் யார் தங்கியிருக்காங்க?"

"சங்கரன்... ஃப்ரம் மைசூர்..."

"எவ்வளவு நாளா இங்கே தங்கியிருக்கார்?"

"நாலு நாளா..."

"ரூம்ல அவர் மட்டும்தானா...?"

"ஆமா..."

"தங்கியிருக்கிற சங்கரனுக்கு எவ்வளவு வயசு இருக்கலாம்?"

"ஐம்பதுக்கும் மேல்..."

"தேங்க்யூ... க்ரௌண்ட் ஃப்ளோரா? ஃபர்ஸ்ட் ஃப்ளோரா?"

"ஃபர்ஸ்ட் ஃப்ளோர்...."

லிஃப்ட் உதவியை நாடாமல் படிகளிலேயே ஏறி முதல் மாடியைத் தொட்டு 104 எண்ணிட்ட அறைக்கு முன்பாய் நின்றார் நவநீதகிருஷ்ணன்.

கதவைத் தட்டுவதற்கு முன்பாகவே -

தாழ்ப்பாள் க்ளக் என்ற சப்தத்தோடு விலக கதவு திறந்தது.

தாடிக்குள் இருந்த சங்கரன் புன்னகைத்தார்.

"வெல்கம் இன்ஸ்பெக்டர்..."

நவநீதகிருஷ்ணன் உள்ளே நுழைந்ததும் - கதவைச் சாத்தி தாழிட்டார்.

"என்னைப் பத்தி ரிசப்ஷன்ல விசாரிச்சிருப்பீங்க... இருந்தாலும் சொல்றேன்... என்னோட பேர் சங்கரன். மைசூரிலிருந்து வர்றேன்..."

"எதுக்காக என்னை வரச் சொன்னீங்க?"

"மொதல்ல இந்த லெட்டரைப் படிங்க இன்ஸ்பெக்டர்... உங்களுக்கு எல்லாமே புரியும்..."

நவநீதகிருஷ்ணன் குழப்பமாய் அந்தக் கடிதத்தை எடுத்தார். சங்கரனை ஒரு பார்வை பார்த்துவிட்டு படிக்க ஆரம்பித்தார்.

போலீஸ் துறைக்கு,



மைசூரைச் சேர்ந்த சங்கரன் எழுதிக் கொண்டது. உங்கள் போலீஸ் பாஷையில் சொன்னால் இது கடிதம் இல்லை. ஒரு வாக்குமூலம். நான் என்னுடைய மனநிம்மதியைத் தொலைத்து இரண்டு வருஷ காலமாகிறது. நிம்மதி காணாமல் போனதுக்குக் காரணம் என் மகள் தரங்கிணியின் மரணம்தான். அவள் காரை வேகமாய் ஓட்டிப் போய் - மின்சார ட்ரான்ஸ்ஃபார்மர் மேல் இடித்து, அதன் காரணமாய் இறந்து போய்விட்டாள் என்பது மைசூர் போலீசின் வாதம். அந்த வாதத்தில் அவர்கள் வெற்றி பெற்று கேஸ் ஃபைலைக் கூட முடித்துவிட்டார்கள்.

ஆனால், அது ஒரு விபத்து என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. அந்தக் கொலைக்கு காரணகர்த்தாவாய் யார் இருக்க முடியும் என்பதையும் யோசித்து - கடந்த இரண்டு வருட காலமாய் தரங்கிணியோடு பழகியவர்களைக் கண்காணிக்க ஆரம்பித்தேன். என் கண்காணிப்பில் சிக்கியவன் அருணகிரி. என் மகளுக்கு ஆடியோ கேசட்டுகளை கொடுத்து புது நண்பன் ஆனவன். அவனை கண்காணித்தபோதுதான் அவன் ஒரு பக்கா உமனைஸர் என்பது புரிந்தது. கோல்ட் மைன்

ஹோட்டலில் பணிபுரியும் பேரர் ஒருவன் அவனுக்கு சிநேகிதமாய் இருப்பதைப் பார்த்து அந்தப் பேரரை தனியாய் மடக்கிப் பணம் கொடுத்து விசாரித்துப் பார்த்தேன். தரங்கிணி இறந்த அந்த இரவில் இருவரும் ஹோட்டலுக்கு வந்து டின்னர் சாப்பிட்டிருப்பது தெரிந்தது. விசயத்தைப் போலீசுக்குக் கொண்டு போனால் - அருணகிரிக்கு தண்டனை கிடையாது என்பதைப் புரிந்துகொண்டேன். சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை உபயோகப்படுத்தி அவன் எப்படியும் தப்பிவிடுவான் என்பதும் புரிந்தது. நானே அருணகிரியைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்தேன். ஆனால் அதற்குள் அருணகிரி வீட்டைக் காலி செய்து கொண்டு மைசூரை விட்டுப் போய்விட்டான்.

கடந்த இரண்டு வருஷகாலமாய் அவனைத் தேடி அலைந்தேன். நான்கு நாளைக்கு முன்னால்... ஏதேச்சையாக இந்த ஊரில் அவனைப் பார்த்தேன். டாக்டர் ப்ரவீண் என்கிற பெயரில் ஒரு போலி டாக்டராய் மாறி ப்ராக்டீஸ் பண்ணிக்கொண்டிருப்பது தெரிந்தது. தீர்த்துக்கட்ட திட்டம் போட்டேன். நான் ஆர்மியில் இருந்தவன். குறிபார்த்து சுட எனக்குத் தெரியும்.

க்ளீனிக்கிற்கு பின்புறம் இருந்த ஒரு மரத்தில்



ஏறி, லிண்டல் வெண்டிலேட்டர் வழியாய் உள்ளே பார்த்தால் அருணகிரியின் அறை தெரியும். அருணகிரி உட்கார்வதும் எழுந்து நடப்பதும் தெரியும். நான்கு நாட்களுக்கு முன்பு - அந்த மரத்தில் ஏறி மறைவாய் உட்கார்ந்துகொண்டு திறந்திருந்த வெண்டிலேட்டர் வழியாய் அருணகிரியை குறிபார்த்துக் கொண்டிருந்தேன். பேஷண்டுகள் வருவதும் போவதுமாக இருந்தார்கள்.

எனக்குத் துல்லியமாய் குறி கிடைக்காததால் பொறுமையாய் காத்திருந்தேன். கடைசியில் அந்த வாய்ப்புக் கிடைத்தது. ஒரு பெண் உள்ளே வந்தாள். அவள் கோபமாய் இருந்தாள். தன் தோழி ஒருத்தியிடம் அருணகிரி மோசமாய் நடந்து கொண்டதைப் பற்றி ஆவேசமாய் கேட்டாள். சில நிமிஷ வாக்குவாதத்துக்குப் பிறகு அவள் போய்விட்டாள். அருணகிரி கைகளைப் பின்னுக்குக் கோர்த்துக்கொண்டு கோபமாய் உலாவினான். இப்போது என்னுடைய குறிக்கு அவன் வாகாக கிடைத்தான்.

சைல்ன்ஸர் பிஸ்டலால் - தோட்டாக்களை வீணாக்காமல் சுட்டேன். வெளியே இருந்த யாருக்குமே தெரியாதபடி - அருணகிரி நிசப்தமாய் சுருண்டான்.

மறுநாள் காலையில் பேப்பரைப் பார்த்தபோது எனக்கு அதிர்ச்சி. நிரபராதியான நிலா என்கிற பெண் இந்தக் கொலைப்பழியில் மாட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது. போலீசார் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இந்த ஹோட்டலில் தங்கியிருந்து நிலைமைகளை கவனித்து வந்தேன். போலீசார் நிலாவைக் கொலையாளி என்கிற கண்ணோட்டத்தில்தான் பார்க்கிறார்கள் என்பது புரிந்ததும் - நிரபராதியான ஒரு பெண் தண்டிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக... நடந்த உண்மைகளையெல்லாம் என் வாக்குமூலமாக இந்தக் கடிதத்தில் சொல்லியுள்ளேன்.

இப்படிக்கு

சங்கரன்

பின்குறிப்பு: இதை என் மரண வாக்குமூலமாகவும் கொள்ளலாம். ஏனென்றால் இன்ஸ்பெக்டர் இந்த அறைக்குள் நுழைவதற்கு முன்பாகத்தான் நான் விஷம் சாப்பிட்டேன்.

நவநீதகிருஷ்ணன் திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

சங்கரன் உட்கார்ந்த நிலையிலேயே இறந்து



போயிருக்க அவருடைய கடைவாயோரம் ரத்தநூல் ஒன்று தெரிந்தது.

# 21

நவநீதகிருஷ்ணன் மெல்ல எழுந்து, நடந்து அறையின் மூலையில் இருந்த டெலிபோனைத் தொட்டு ரிசீவரை எடுத்தார். டயலில் எண்களைத் தட்டிவிட்டு... ரிங் போய் ரிசீவர் எடுப்பதற்காகக் காத்திருந்தார்.

"ஹலோ..." அவிநாஷ் குரல்.

"அவிநாஷ்! ஆர்.எஸ்.புரத்தில் இருக்கிற ப்ரியா ஹோட்டலுக்கு உடனே புறப்பட்டு வாங்க... மார்ச்சுவரி வேனுக்கு சொல்லிடுங்க..."

"சார்... வாட் ஹேப்பண்ட்...?"

சுருக்கமாய் விவரம் சொன்னார் நவநீதகிருஷ்ணன். செவிமடுத்த அவிநாஷ் திகைப்பாய் கேட்டார்:

"சார்... வாட் அபௌட் நிலா...? அந்தப் பொண்ணு இந்தக் கொலையைப் பண்ணியிருக்காத பட்சத்தில் ஏன் தலைமறைவாயிருக்கணும்?"

"அதை அப்புறமா டீல் பண்ணுவோம்... மொதல்ல இந்த சங்கரனோட விவகாரத்தை முடிப்போம்... கம் டு தி ஸ்பாட்..."

"எஸ் ஸார்..." ரிசீவரை வைத்துவிட்டு எழுந்தார் அவிநாஷ். அருகில் இருந்த கான்ஸ்டபிளிடம் மார்ச்சுவரி வேனை ஏற்பாடு பண்ணச் சொல்லிவிட்டு, ஸ்டேஷன் வாசற்படி இறங்கினார்.

அந்த ஆட்டோ வேகமாய் வந்து நின்றது.

அவிநாஷ் நிமிர –

ஆட்டோவின் உள்ளேயிருந்து –

நாகராஜனும் நிலாவும் வேகவேகமாய் வெளிப்பட்டார்கள். நாகராஜன், அவிநாஷிடம் படபடத்தான். "சார்.. ஷி ஹேஸ் கம்..." சொன்னவன் தொடர்ந்தான்: "சார்... நிலா டாக்டர் பிரவீணைப் போய் பார்த்தது உண்மை. பெண்கள்கிட்ட டீஸண்ட்டா நடந்துக்கச் சொல்லி அவருக்கு அட்வைஸ் பண்ணியதும் உண்மை. ஆனா, அவ அவரைக் கொலை செய்யலை... அன்னிக்கு ராத்திரி பெங்களூருக்குப் புறப்பட்டுப் போன நிலா, தன்னுடைய தோழி வீட்டுக்குப் போறதுக்காக ஒரு ஆட்டோவை பிடிச்சிருக்கா... அந்த ஆட்டோ டிரைவர் ஆள் நடமாட்டம் இல்லாத ரோட்ல போனபோது... ஒரு ரௌடி கும்பல் ஆட்டோ டிரைவரையும், நிலாவையும் தடியால தாக்கி காயப்படுத்தி நிலாவோட லக்கேஜையெல்லாம் கொண்டு போயிட்டாங்க...! தலையில் அடிபட்டு மயக்கமா கிடந்த நிலாவையும் டிரைவரையும் யாரோ ஹாஸ்பிடல்ல கொண்டு போய் அட்மிட் பண்ணியிருக்காங்க... நிலாவுக்கு மூணு நாளா நினைவு திரும்பலை. நிலா யாருன்னு தெரியாததினால... அங்கிருக்கிற டாக்டர்ஸினாலேயும் மெஸேஜைக் கன்வே பண்ணமுடியலை... நேத்திக்கு மிட்நைட்தான் நிலாவுக்கு உணர்வு திரும்பியிருக்கு! தான் யார்ங்கிறதை சொன்னதுமே... டாக்சி வெச்சு இங்கே கொண்டு வந்துட்டாங்க. நவ் ஷி ஈஸ் ஆல்ரைட்...! பிரவீண் கொலை சம்பந்தமா நீங்க அவ மேல சந்தேகப்படறது தெரிஞ்சதும்... தலைக்காயத்தைப் பொருட்படுத்தாமே... நிலா உங்களைப் பார்க்கிறதுக்காக வந்திருக்கா..."

நிலா குறுக்கிட்டாள்.

"ஸார்! அன்னிக்கு என்ன நடந்ததுன்னா...?"

அவிநாஷ் புன்னகையோடு கையமர்த்தினார். "நீங்க எதையும் சொல்ல வேண்டியதில்லை நிலா. ரெண்டு நிமிஷத்துக்கு முன்னாடிதான் கேஸ்

க்ளீயராச்சு...! குற்றவாளியையும் மடக்கிட்டோம்... ஆனா உயிரோடு இல்லை..."

"ஸ... ஸார்...!"

"ஜீப்புல ஏறுங்க... பேசிட்டே போவோம்..."

அவிநாஷ் ஜீப்பைக் கைகாட்டிவிட்டு முன்பக்கமாய் தாவி ஏறினார்.

(முற்றும்)


## திகில் ஸ்டோரி

மலர்: 2 இதழ்: 5

வெளியிடுபவர் - ஆசிரியர் :

எம்.எஸ்.முருகன்

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர்,

நந்தனம், சென்னை - 600 035.

போன். 044 - 2436 1734


கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.


'Thikil Story' Novel Monthly

Owner, Publisher & Editor **M.S. Murugan**,

Published at:

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,

Nandanam, Chennai - 600 035. Phone : 98405 14529